தென்மொழி

தமிழ் நலத்தைத் தவிர்ப்பாரைத் தவிர்த்திடுக!

விழித்திருத்தம் இல்லாதான் மின்மினியை விண்மீனாய்
    வியப்புறவே உரைப்ப தைப்போல்—
வழித்திருத்தம் காணாதான் தானறியா ஊருக்கு
    வழிகாட்ட வந்த தைப்போல்,
மொழித்திருத்தம் இல்லாத எழுத்தாளர் எதைத்திருத்த
    முன்வந்திங் கெழுத லுற்றார்?
பழித்தொதுக்கி வாருங்கள் அவரெழுத்தை-அவர்நலத்தை;
    பயனுண்டாம் சிறிது நாளில்!

தமிழ்மொழியைப் பேணாதான் தமிழினத்தைப் பேணாதான்;
    தன்னலத்தைப் பேண வந்தான்!
தமிழினத்தைப் பேணாதான் பிறவினத்தைத் தான்எங்ஙன்
    பேணவுளங் கொள்ள வல்லான்?
கமழ்மலரைப் பேணாத மூக்கறையன் கனிநலத்தைக்
    காணவுளங் கருது வானோ?
தமிழ்நலத்தைப் பேணாத எழுத்தாளர் தம்மெழுத்தை—
    தம்நலத்தை—தவிர்த்தல் நன்றே!

சுவடி: 12.
ஓலை: 3.

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

விலை:
ஓர் உருபா.

நமக்கு வந்த மடல்கள்

0: 421: வீறுகொண்ட விடுதலைப் பாவலர்க்கு! யான் நடுவண் பைதிரத்துச் சாகர் பல்கலைக் கழகத்தில் முதுகலை (ஆங்கில இலக்கியம்) முதலாண்டு மாணவனாகச் சேர்ந்து உள்ளேன். 'இந்தி'யர்களின் கொடுமையை இங்குத்தான் நான் பார்க்கிறேன. தப்பித் தவறித் தனித்தமிழில் பேசிவிட்டால், அங்குள்ள நம்மவர் நம்மைப் பார்த்து, **'வெறியன்'** எனப் பெயரிட்டு அழைக்கின்றனர். அந்த நல்ல (!) மனம் படைத்தவர்கள் இதுபோன்ற வேறு மாநிலங்களுக்கு வந்து பார்க்க வேண்டும். இங்கு உள்ளோர் இந்தி தெரியாதவன் என்று தெரிந்திருந்தும் ஆங்கிலத்தில்கூடப் பேசாது இந்தியிலேயே பேசிச் செல்கின்றனர். அவர்களைப் பார்த்து மொழி வெறியர்கள் என்று யார் சொல்வது? இங்கு வந்தபின்தான் மொழித் துறையில் தமிழர்களின் நிலை கவலைக்கிடம் என்பது நன்கு விளங்கிற்று.

நாட்டுச்சாலைத் தமிழன்பன், சாகர் (U.P.)

0: 422: தாங்கள் தங்களைக் குமுகாயத்திற்கு அடையாளங் காட்டிக் கொள்ள வேண்டும். சாதியொழிப்புப் போன்ற போராட்டங்களில் கலந்து கொள்ளுதல் அல்லது தாங்களே ஏற்பாடு செய்து நடத்துதல் போன்றவை நல்லது. தங்களின் பின் எத்தனைப் பேர் வருகிறார்கள் என்பதுபற்றிக் கவலையில்லை; கல்வி நிலையங்களின் பெயர்களெல்லாம் சாதிப் பெயர்களாகி விட்டன. சாதிக் கழகங்களும் மிகுதியாகப் பெருகி வருகின்றன. சாதிகளை ஒழிப்பதற்காகத் தாழ்த்தப்பட்டவரை முன்னேற்றிச் சமமாக்குவது என அரசு உதவித் தொகை கொடுக்கப் போக, இப்பொழுது ஒவ்வொரு சாதியினரும் ஒன்று சேர்ந்து, தங்கள் சாதியைத் தாழ்த்தப்பட்ட சாதியாக அறிவிக்கக்கோரிச் சாதிப் பெயரை முத்திரையிட்டுக் கொள்ளத் தொடங்கி விட்டார்கள். எனவே நமது பணியில் குறைபாடு உள்ளதாக எனக்குத் தோன்றுகிறது. கொள்கையில் ஒற்றுமையுடையோர் ஒன்றுபட வேண்டும். பெரியாரின் துணைவியார் ஆண்டு மலரில் போராட்டத்திற்குத் தமிழர்கள் அணியமாக இருங்கள் என்று அறைகூவல் விடுத்துள்ளார். எனவே உங்கள் பின்னால் ஒரு கூட்டம் அவர்கள் பின்னால் ஒரு கூட்டம் ஆகத் தனித்தனித் தமிழர் பிரிவு பட்டுக் கிடப்பதும், அவ்வகையிலேயே தனிநாட்டிற்கு முயலுவதும் வெற்றிக்குரிய வாய்ப்பாக இருக்காது என்றே கருதுகிறேன். உணர்ச்சியுள்ள தமிழரே மிகக் குறைவு. அவர்களும் இப்படிப் பிரிந்து கிடந்தால் என் செய்வது? அவர்கள் தனித்தமிழ் நாட்டிற்காக ஏதேனும் போராட்டத் திட்டம் வைத்துள்ளார்களா? என்று தாங்கள் அறிய முற்படுவதில் தவறில்லை என்றே கருதுகிறேன். தனிக் கொள்கைகளைக் கொஞ்சம் பின் வைத்துப் பொதுக் கொள்கையில் தமிழ்நாடு ஒன்றுபடலாம் என்பதே எனது எண்ணம்.

—சு. தமிழரிமா, காரைக்குடி-1.

0: 423: தங்கள் தனித்தமிழ் முயற்சி என் போலும் வளர்கின்ற எழுத்தாளர்க்கொரு பயிற்சி! பாப்புனையும் பாவலர்க்குத் தென்மொழி தெவிட்டாத ஒரு பாடநூல்! இலக்கியம் ஆயமுனையும்

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம் பார்க்க)

இம்மாதச் சிறப்பு மடல்:

புகழ்பாடும் தமிழினமே பொங்கியெழு!

0:420: நெஞ்சார்ந்த இனக்காவல! வணக்கம். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய நம் மூத்தகுடித் தமிழினத்தின் அருமை பெருமையெல்லாம் பொருட்காட்சியில் வைத்துப் பார்ப்பதற்குக்கூட எச்சங்கள் எதுவுமின்றி அத்தனையும் அழிந்து போய்விட்ட இற்றை நாளில்—எத்துணைதான் எடுத்துரைத்தும், குட்டுகள் பல குட்டிக்கூனை நிமிர்த்த முனைந்தும், நிமிராத கூன் பெற்றுவிட்ட நம் குமுகாயம் கேடுகெட்டு, சூடுசுரணை கெட்டு, கொலுத் தன்மை வேரோடிவிட்ட இற்றை நாளில் தங்களின் "மூளை கெட்ட முண்டங்கள்" ஆசிரியவுரை என்ன பயனைத்தர வல்லதோ? தமிழனின் சரிவுப்படிகளிலெல்லாம் முட்டுக் கொடுத்துக் கால்கடுத்த தந்தை பெரியாரினும் மேலாகப் பார்ப்பனியத்தையும், ஆரியனின் நடுவண் அரசையும் சாடுவதற்கு வேறொருவர் இங்குத் தோன்றித்தான் இவன் வீறுபெற வேண்டுமா? அன்றி அதற்கும் மேலாகத் தாங்களும் ஐயா பாவாணர் அவர்களும் இதுகாறும் எழுதிக் குவித்தும் மேடைகளில் முழங்கியும் ஊட்டிய விடுதலைப் பாலினும் மேலாக வேறு எதனை இவனது நாளத்தில் பாய்ச்சி எழுச்சி பெறப் போகிறானோ?

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வெடித்த பிரஞ்சு எழுச்சிக்குக் கரணியங்களாக அந்நாட்டுக் குடிமக்கள் பட்டுவந்த அரசியல், பொருளியல்,குமுகாய ஏற்றத் தாழ்வுகள்தாம் என்று கூறுவர். ஆனால் நம் தமிழினம் அவற்றுக்கும் மேலாக ஏறத்தாழ கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக ஆரியப் பார்ப்பனனின் அளவிறந்த கொட்டங்களுக்கு அடிவருடியும், அவனால் அமுந்தப்பட்டும் கிடக்கின்றது. சொல்லப்போனால் பதினெட்டாம் நூற்றாண்டில் பிரஞ்சு நாட்டில் கண்டிராத பல்வேறு ஆரிய அதிகார அட்டூழியங்கள் நம் தமிழினத்தை இன்றுவரை தலையெடுக்கச் செய்யாமலும், மொழிக் கலப்பால் நம் விழிகளைப் பிடுங்கியும், இனக்கலப்பால் நம் தனித் தன்மையையும் பண்பாடுகளையும் பாழ்படுத்தியும் நம்மை அடிமைத் தனத்தின் மொத்த உருவமாக்கி ஆட்டிப்படைத்து மகிழ்கின்றன! இக்கால ஆரியக் கொட்டங்கள் மட்டுமே நம்மினம் கிளர்ந்தெழச் சரியான கரணியங்கள் ஆகாவா? அங்கே (உ)ரூசோ ஒருவன் எழுதிய எழுத்துகளே சுரணை மிகுந்திருந்த அம்மறவர்களின் அடிமைத் தளையை உடைத்தெறிந்தன. ஆனால் இங்கே? அண்ணா, பெரியார், பாவேந்தர், பெருஞ்சித்திரனார்,பாவாணர் போன்ற புரட்சியாளர்களின் பேரிரைச்சலும்கூட இவனது களிம்பேறிய செவிப்பறையைக் கிழித் தெறியும் ஆற்றல் இழந்ததோ? அன்றி இவர்களின் தீக்கனலொக்கும் எழுத்தும் கூட இவனது குருதியைச் சூடேற்றத் தவறியதோ? நெடுங்காலந் தொட்டே தடித்துப்போன—மரத்துப் போன இவனது மேனி சூடேற்றியும் சுரணை பெறவில்லையோ? நலல மாட்டுக்கு ஒரு சூடு என்பார்களே; இவனுக்குப் பல சூட்டுக்கோல் போட்டும் தன் மழுங்கற்றன்மை மறந்து மறம் பெற்றானில்லையே! அடிக்க அடிக்க அம்மியும் நகரும்; ஆனால் இத் தமிழனோ நையப் புடைக்கப் புடைக்க இம்மியும் நெகிழான்! இவனைக் கொண்டு வீழ்ச்சியுறு தமிழகம் எங்ஙனம் எழுச்சியுறும்?

எனவே எம் அரிமா நெஞ்சமே! பூட்டிய கூண்டுள் கட்டுண்டு கிடக்கும் அரிமா கட்டுடைத்தும் வெளியில் வரத் தயங்கினால், அத்தயக்கத்தின் காரணியம் அதன் எதிரிலே சாட்டை கொண்டு அச்சுறுத்தும் காவலனின் கட்டுப்பாடாகவும் இருக்கலாம் அல்லவா? அவ்வாறே கட்டைத் தகர்த்தும் தமிழன் பட்டென்று வீறுகொள்ளத் தவறினால் அவனைக் கூண்டிலடைத்த கொடுங்காவலனைக் கழுமரம் ஏற்றினாலொழிய நிலைமையைச் சரிகட்ட முடியாது! நான் மட்டும் காளமேகனாகவோ பாவேந்தராகவோ தோன்றியிருந்தால் இப்பார்ப்பனக் கூட்டத்தை அறம்பாடியே எரித்திடுவேன்—அன்றி என்னிடம் ஒரு நீர்க்கலமேனும் இருப்பின் இந்த ஆரிய இடையர்களை ஒட்டு மொத்தமாகக் கொண்டுபோய் அமைதியான (பசிபிக்) மாக்கடலின் நடுவத்தில் மூழ்கடித்துத் திரும்புவேன்—அன்றி அண்மையில் இந்தியா வெடித்த அணுகுண்டேனும் ஒன்றிருப்பின் முதலில் இவன்களின் பூணூல்களை அறுத்தெறிந்து பின்பு கூட்டுமொத்தமாக வெடியால் தகர்ப்பேன்! அவன் ஆணிவேரையும் அக்குவேரையும் அழிப்பது தான் இனியெழும் கடமை! புகழ்பாடும் தமிழினமே பொறுத்தது போதும் பொங்கியெழு! பார்ப்பானின் பூணூலை அறுத்து உம் பெண்டிற்குத் திருத்தாலிக் கயிறுக்கு! அன்றேல் உனக்கு விடிவேயில்லை!!

கல்லூர் அ. சாத்தப்பன், மதுரை சட்டக்கல்லூரி.

தூயதமிழ் எழுதாத இதழ்களைப் பொசுக்குங்கள்!

சென்ற (சுவடி 12 ஓலை 2.) இதழில் வெளிவந்த முகப்புப் பாட்டு, சில படிகளில் தெளிவாக அச்சேறாமல் போனதால், மீண்டும் அதனை இங்கு வெளியிட்டுள்ளோம். பயன் படுத்திக் கொள்க.

ஆங்கிலத்தில் வடமொழியில் பிழையொன்று வரக்கண்டால்
அதைப்பொறுக்காப் பார்ப்பனர்தாம் அவர் நடத்தும்
தீங்கான தாள்களிலும் கதைகளிலும் தமிழ்க்கொலையை
நாள்தோறும் விடாப்பிடியாய்ச் செய்கின்றார்கள்!
ஈங்கிந்தத் தமிழர்களும் எதற்காகத் தாய்மொழியைத்
தாம்நடத்தும் இதழ்களிலே இழிவுசெய்வார்!
தூங்காதீர் தமிழர்களே! மொழியிழிவே இனஇழிவாம்!
முதன்முதலில் இதழ்ப்புரட்சி தொடங்குவீரே!

ஏயதமிழ் வளர்க்கின்ற மாணவரீர்! ஆசிரியப்
பெருமாண்பீர்! எந்தமிழ்த்தாய் தந்தையர்க்கே
சேயவர்தாம் நீவிரெனின் இதழ்களிலே தமிழ்நலத்தைச்
சிதைக்கின்ற சிறுமையினைப் பொறுக்கலாமோ?
தூயதமிழ் எழுதாத இதழொன்று தமிழகத்தின்
கடைகளிலே எழில்கொழிக்கத் தொங்குமாயின்
போயதனைப் பறித்தெடுத்துக் கிழித்தொருங்கே புலங்குவித்துப்
புடைசூழ்ந்து தீமூட்டிப் பொசுக்குவீரே!

"கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

தென்மொழி

இலக்கிய இதழ்

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

சுவடி: 12, ஓலை: 3.

சிலை.-தி. பி. உ௦௦௫-(திச.-'74-சன.-'1975.).
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

எல்லா வகைத் தீய விளைவுகளுக்கும் அடிப்படையான, செய்தித் துறையையும் பொழுது போக்குத் துறையையும் கட்டுப்படுத்துக!

எங்கு மக்கள் தொகை குறைந்திருந்து, வறுமை மிகுந்திருக்கின்றதோ, அங்கு வளமை போதவில்லை என்பது பொருள். ஆனால், எங்கு மக்கள் தொகை மிகுந்திருந்து வறுமையும் மிகுந்திருக்கின்றதோ, அங்கு மக்கள் ஆற்றல், ஏதோ ஒரு வழியில் வீணாகிக் கொண்டிருக்கின்றது

என்பதே பொருள். இந்நாட்டிலோ, மக்கள் ஆற்றல் ஒரு வழியில் விஞ்கிக் கொண்டிருக்கவில்லை; பல வழிகளில் விஞ்கிக் கொண்டிருக்கின்றது. இந்த நாட்டை உள்முகமாகவே அரித்தெடுக்கும் தீமைகள் மூன்று. ஒன்று சோம்பல்; இரண்டாவது வறுமை; மூன்றாவது மூட நம்பிக்கை! இம் மூன்று தீமைகளும் ஒன்றோடொன்று மிக்க இறுகலான தொடர்புடையவை; அரசியலுக்கோ மிக்கக் கவர்ச்சி வாய்ந்தவை. ஆனால், அதே சமயத்தில், மக்களை என்றென்றும் மீளாத பள்ளம் படுகுழிகளில் கொண்டுபோய்க்கிடத்தும்பான்மை மிக்கவை. இவற்றைச் சரியாக விளங்கிக் கொண்டு எந்த ஓர் ஆட்சி, அவற்றின் ஆணி வேரையும் பக்க வேர்களையும் அகழ்ந்து களைந்தெடுக்க வில்லையோ, அந்த ஆட்சியைப் பற்றிக் கொண்டே செழித்து வளர்ந்து, காலமெல்லாம் மண்டிவிடும் தன்மை நிறைந்தவை.

சோம்பல் மிகுந்த நாட்டில் சொகுசுக்காரர்களே முதனிலை பெற முடியும்; சொற்சிலம்பக்காரர்களே ஆட்சியமைக்க முடியும்; ஆரவாரக்காரர்களே தலைமையேற்க முடியும் அடாவடித்தனங்களே சட்டமாக முடியும்! வறுமைமிக்க ஒரு நாட்டிலோ செல்வர்களே ஆளுமை பெற முடியும்; உரிமை பேசுபவர்களே தலைவர்களாக முடியும்; ஊரை ஏமாற்றுபவர்களே பதவியாளர்களாகவும் அதிகாரமுடையவர்களாகவும் அமர்ந்து, ஆட்சியுலா வர முடியும். மூட நம்பிக்கைகள் மிகுந்த நாட்டிலோ, ஒரு மூடனுக்கிருக்கிற மதிப்பு அறிவாளிக்கு இருக்காது; பழமை பேசுகிறவனுக்கிருக்கிற சாய்கால், புதுமை போற்றுபவனுக்கு இருக்க முடியாது; 'சாதி' தலைமையேற்கும்; 'மதங்கள்' ஊராளும்! மண்டுகங்கள் பதவிதாங்கும்! இந்த முப்பருமான நிலைகளும் எப்பொழுதும் நிறைந்து விளங்கும் நாட்டை எத்தனை அறிஞர்கள் வந்தாலும் தூக்கி நிறுத்த முடியாது. இந்நாடு இந்த வகைகளில் என்றென்றும் பெயர் போனது; பெருமை வாய்ந்தது; உயர்வு சான்றது!

இங்கு எத்தனையோ வகையான சட்டங்கள் போடப் பெறுகின்றன; திட்டங்கள் வகுக்கப் பெறுகின்றன; கட்டுக்காவல்கள் மிகுக்கப் பெறுகின்றன. ஆனாலும், இந்நாட்டில் சோம்பல் விலக்கப் படவில்லை; சுறுசுறுப்புப் புதுக்கப் பெறவில்லை; வறுமை ஒழிக்கப் பெறவில்லை; வளமை செழிக்கப் பெறவில்லை; அறிவு விளைக்கப் பெற வில்லை; அறியாமை கொல்லப் பெறவில்லை. இவற்றை அடியூன்ற எண்ணிப் பார்க்கும் ஆற்றலும், இந்நாட்டை ஆள வந்தவர்களுக்கு இருந்ததில்லை; இருந்தாலும் எடுத்துச் சொல்லத் துணிவு கொண்ட தில்லை; சொன்னாலும் செயலாற்றும் முனைப்பிருந்ததில்லை. ஏனெனில், அவர்கள் அவற்றின் அடித்தளங்களின் மேல்தான் தங்கள் தலைமை

களைப் பொறித்துக் கொள்ள முடியும்; பதவி நாற்காலிகளைப் போட்டுக் கொள்ள முடியும்; ஆட்சி மகுடங்களைச் சூட்டிக் கொள்ள முடியும்! எனவேதான் இந்த நாட்டில் அறிவுப் புலன் என்றென்றும் இருண்டு கிடக்கின்றது; அறியாமை அரசோச்சுகின்றது; சோம்பல் குடியேறு கின்றது; வறுமை மலர்ந்து மணம் பரப்புகின்றது!

இக்கால், கானமுயலெய்த அம்பைவிட, யானை தப்பிய வேல் ஏந்துவது பெருமை—என்னும் கருத்து மடிந்து மட்கிப் போய் விட்டது; சிறிய நோக்கங்களுக்காகப் பெரு முயற்சிகள் செய்யப் பெறு கின்றன. பெருமை, சிறுமை என்பவற்றிற்கிடையில் எந்த வகை வேறுபாடும் இல்லை. இன்னுஞ் சொன்னால் சிறுமையே எல்லா வகையிலும் பெருமையுறுகின்றது. வேலையின்றி யிருப்பது சிறுமை என்றது அந்தக் காலம்; இப்பொழுது ஒரு வேலையுமின்றி இருப்பது தான் பெருமை! நல்லனவல்லாத வழிகளில் பொருளை ஈட்டுவதும், அதால் பிழைப்பதும் மிகமிகச் சிறுமை வாய்ந்தவை என்றது, முற் காலத்தில்! இக்காலத்திலோ, "எப்படியேனும் பொருளை ஈட்டு; எவ்வா றேனும் பிழை" என்பது இராப்பகல் மந்திரம்! குற்றஞ் செய்பவனின் தலை தானாகவே மக்கள்முன் தாழ்ந்து கவிழ்ந்து விடுவதெல்லாம் அப்பொழுது; இப்பொழுது குற்றஞ் செய்பவன்தான் தலை நிமிர்ந்து நடக்கின்றான்; குற்றஞ் செய்யச் செய்ய அவன் தலை வானளவு நிமிர்ந்து விடுகிறது, அவனே தலைவன்; அவனே அரசன்; இன்னுஞ் சொன்னால் அவனே தேவன்! இந்தப் பட்டியலில் அடங்கும் 'பட்டி' நிலைகள் இன்னும் பலவுண்டு! ஆனால் அவை சொல்லுக்கு அணியாக இருக்கும்; நினைப்புக்குப் பிணியாக நின்று உள்ளத்தை வருத்தும். எனவே அவை இங்குத் தவிர்க்கப் பெறுகின்றன.

இனி, இந்த நிலைகளுக்கெல்லாம் ஒரு விடிவே இல்லையா, முடிவே வராதா என நினைத்து ஏங்கும் உள்ளங்களும் சில உண்டு, இந்த நாட்டிலே, இந்தக் காலத்திலே! உண்டு; விடிவும் உண்டு; முடிவும் உண்டு! ஆனால் முயற்சிதான் வேண்டும், 'வேண்டும்' என்கிற அறிவு தான் வேண்டும்! அவ்வறிவு கைவந்து விட்டால் ஆக்கந்தான்; இல்லாவிடில் என்றென்றும் ஏக்கந்தான்! அவற்றிற்கெல்லாம் என்ன செய்ய வேண்டும் என்பதுபற்றிக் கொஞ்சம் எண்ணிப் பார்ப்போம்!

முதற்கண், சோம்பலை இந்நாட்டினின்று, குறிப்பாக இத் தமிழ் மண்ணிலிருந்து ஓட்டியாகல் வேண்டும். அதற்கு அரசு அறிவோடு எண்ணித் துணிவோடு செயலாற்றுதல் வேண்டும். சோம்பேறிகள் நாட்டில் பொலபொலவெனப் பெருகி விட்டார்கள். ஒருவேலையையும் செய்யாமல், ஒன்றிலும் ஈடுபடாமல், ஆக்கி வைத்த சோற்றை முக்கி

விட்டு, எடுப்பான உடைகளை உடுத்துக் கொண்டு, கழுத்தையளாவித் தொங்குபடியும், கன்னத்தில் உலாவி முங்கும்படியும் மயிர்களை வளர்த்துக் கொண்டு, பொட்டைச்சிகள் உலாவரும் சந்து சதுக்கங்களிலும், கடைத்தெரு, கடற்கரைகளிலும், மக்கள் நெரிசலும் போக்குவரத்தும் நிறைந்த சந்தை சாலைகளிலும், காலை முதல் இரவு வரைப், பரம்படித்து வரும் அரம்பமாக்களாக, ஊர்ந்து கொண்டும், பேசிக் கொண்டும், உராய்ந்து கொண்டும், இடித்துக் கொண்டும், இளித்துக் கொண்டும் ஏறப் போய்வந்து கொண்டு இருக்கின்றூர்களே–'இளைஞர்' 'பெருமக்கள்'–அம்மக்களை அரசு கொஞ்சம் கண்காணிக்க வேண்டும். கவனிக்கவும் வேண்டும். அவர்கள் மாணவர்கள் அல்லர்; மாணவர்கள் உருவில் திரியும் வீணவர்கள்! உழைப்பையே உணராத 'தேவக்' கயவர்கள்! அவர்கள் முதுகுகளில்தான் 'சோம்பல்' பல்லக்கேறிக் கொண்டுள்ளது; அவர்கள் கைகளில்தான் அது படை கொண்டுள்ளது; அவர்களின் கால்களில்தான் அது நடை விரித்திருக்கின்றது. அவர்களைப் பிடித்து. அவர்களின் நாடி நரம்புகளில் குடியேறிய இந்நாட்டின் மூலநோயைப் பிதுக்கி வெளியேற்ற வேண்டும்; அவர்களின் அரத்த நாளங்களில் உழைப்புச் சூட்டை உண்டாக்க வேண்டும்! அவர்களால்தான் 'முதுமை' உழைக்கின்றது; 'பெண்மை' குலை நடுங்குகின்றது; 'தாய்மை' குடல் சரிகின்றது; 'ஏழ்மை' ஈரலைக் கவ்வுகின்றது. அவர்களையும் அவர்களைப் போலும் கட்டுக் காவலற்ற காட்டு மாடுகளையும் பிடித்துக் கட்டாய வேலையோ, பட்டாளப் பயிற்சியோ செய்ய அரசு வகை செய்ய வேண்டும். இது வீண் வேலை என்று விட்டு விடாமல், அதிகாரத்தின் 'சட்டச்' சவுக்கை அவர்களிடத்தில் 'விளையாட' விட வேண்டும். அதன் பின் இந்நாட்டில் உள்ள பாதி நிலங்கள் விளையத் தொடங்கும். மீதிப் புலங்கள் களைகட்டத் தொடங்கும்! 'பசுமைப் புரட்சி' 'பசுமைப் புரட்சி' என்று நம் ஆட்சியாளர்கள் தொண்டை வறளக் கூக்குரலிடுகிறூர்களே, அந்தப் புரட்சி வேறெங்கும் இல்லை. வேறெப்படியும் செய்யப்பட வேண்டுவதில்லை. இங்குள்ள 'சோம்பேறி' இளைஞர்களின் தசையியக்கங்களைக் கொண்டுதான் விளைவிக்கப் பெறல் வேண்டும். அவர்கள் நாடி நரம்புகளை முறுக்கேற்றுவதன் வழிதான் செய்விக்கப் பெறல் வேண்டும். இத்தகைய வீண நரம்புத் தளர்ச்சி நோயாளிகளால்தான், இந்நாட்டின் பொருளியல் முதுகந் தண்டே கூனி வளைந்திருக்கின்றது. குழுகாய மார்புக் கூடே ஒட்டி உலர்ந்து கிடக்கின்றது! எனவே நம் அரசு ஏனோதானோவென்று இருந்து விடாமல், உடனடியாக இந்நிலையில் கருத்துச் செலுத்தியாகல் வேண்டும்.

அடுத்து, இந்நாட்டைப் பெருத்த கேட்டுக் குழிக்குள் தள்ளிக் கொண்டிருப்பது வறுமை என்னும் கொடிய தீப்பிணியாகும். இந் நாடுற்ற வறுமைக்கு இங்குள்ள சோம்பல் எருவும் ஒருவகைக் கரணியம் என்றாலும், இங்குள்ள செல்வக் கொடுமையாளர்களும், முதலாளிய முதலைகளும், நிலக் கொள்ளைக்காரர்களுமே அடிப்படை ஊட்ட உரங்களாவார்கள், இவர்கள் பண்ணுகின்ற அழும்புகள் கொஞ்ச நஞ்சமன்று. சுண்டியெடுக்கும் வெயிலிலும், எலும்பைத் துளைக்கும் குளிரிலும், உடல் நொதியும் மழையிலும் வாடிவருந்தும் பலகோடிப் பாட்டாளியர்தம், ஊனையும் உயிரையும் உறிஞ்சிக் குடிக்கும் அக் கொடியவர், இன்னும் எத்தகைய ஆட்சி வந்தாலும், அவ்வாட்சி நிழல்களிலேயே தங்கள் கொள்ளை முதலீட்டங்களை வெள்ளையாகச் செய்யும் அளவில் வலிவு பெற்றவர்கள். அவர்கள் 'சாதி' என்னும் கம்பங்களில் 'மதம்' என்னும் கொடிகளைப் பறக்க விட்டுக் கோட்டை கட்டி வாழும் வகையில், சட்டங்கள் முதுகுகளை அவர்களுக்காக நெளிந்து கொடுத்துக் கொண்டிருக்கின்றன. அதிகாரங்கள் அவர்களுக்குப் பல்லக்குத் தூக்கிக் கொண்டிருக் கின்றன. அமைச்சர்கள் அவர்களின் பாதந்தாங்கிகளாக விருந்து, மடிச்சோற்றுக்கு உலா வருகின்றனர். இந்நாட்டில் இந்தக் கேடுகள் என்றும் மறையாதபடி இங்குள்ள மூடநம்பிக்கைகள் அவற்றிற்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. இயல்பாகவே வறுமையும் மூடநம்பிக்கையும் இரட்டைப் பிள்ளைகள். வறுமை பிறந்தவுடன் மூட நம்பிக்கை தலைமுட்டுகின்றது. இந்த நாடே மூடநம்பிக்கைகளின் அடித்தளத்தில் கட்டப்பட்டதாகும். உலகின் மற்ற சில நாடுகளில் வறுமை நீங்கி வருகின்றது என்று சொன்னால், அங்கு மூடநம்பிக்கை யும் நீங்கி வருகின்றது என்பதே பொருள். மேலை நாடுகளில் சில பண்பாட்டையும் விலக்கும் அளவிற்குக்கூட, மூடநம்பிக்கைகளைக் குழிதோண்டிப் புதைத்து வருகின்றன! தேவையற்ற மூட நம்பிக்கைகளை அறக் கழற்றிவிட்டுத் தேவையான நம்பிக்கைகளை கடைப் பிடிப்பதையே உலகியல் முயற்சிகளாகக் கருதுதல் வேண்டும்.

மொத்தத்தில், இந்த நாட்டில் வறுமையை ஒழிக்கப் பல முயற்சி-கள் நடைபெறுகின்றன. ஆனால் அத்தனையும் உப்புச் சப்பற்றவை. ஒரு பக்கம் வறுமையை ஒழிக்கச் சில மந்திரங்கள் போட்டால், மறு பக்கம் அதனை உண்டாக்கச் சில வெறியாட்டங்கள். தலை மீறு கின்றன. ஏழைகளுக்குக் கை நிறையச் சம்பளங்களை வாங்கிக் கொடுக்கச் சில கட்சிகள் போராடுகின்ற நேரத்தில், அவர்கள் கை களில் வந்து சேரும் காசுகளைக் கொள்ளையடிக்கப், பலவகையான

நாகரிகப் புரையாட்டங்களையும் பொழுது போக்குகளையும் சில கூட்டங்கள் திட்டமிடுகின்றன. வாணிகம் என்னும் பெயராலும், தொழில் வளர்ச்சி என்னும் திட்டச் செயல்களாலும், சட்டப்படி இந் நாட்டில் உள்ள மக்களில் பெரும் பகுதியினர் என்றென்றும் வறுமையிலேயே உழன்று கிடக்க வழிசெய்யப் பெறுகின்றன. வறுமை ஒழிப்புக்குக் கையாளப் பெறும் வழிவகைகள் அனைத்திலும் வளர்வது முதலாளியமாகவே இருப்பதை ஏன் இங்குள்ளவர்கள் இன்னும் விளங்கிக் கொள்ளவில்லை? கல்விக் கூடங்கள் பெருகு வதைப் போலவே திரைப்படக் கூடங்களும் பெருகுகின்றன. தொழிற் கூடங்கள் பெருகுவதைப் போலவே தேவையற்ற நாகரிகப் போலிப் பொருள்களை மலைமலையாகச் செய்து குவிக்கும் தொழில் முறைகளும் பெருகுகின்றன. மக்களுக்கு முன்னுள்ள வழிகளில் வருகின்ற வருவாய்ச் செடி—ஊதியக் கொழுந்துகள் பின்னுள்ள வழிகளில் தீய்ந்து போகின்றன. நாகரிகம் என்பதே போலியளப்புகளா? அல்லது புனைவுப் பொருள்களின் பெருக்கமா? மக்கள் கைகளுக்கு அவ்வப்பொழுது வரும் சிறுசிறு தொகைகள், அங்குள்ள போலிப் பொருள்களை வாங்கவும் பொழுது போக்குகளைத் துய்க்கவுமே சரியாகப் போகின்றன. அந்தப் போலிப் பொருள்களைச் செய்ப-வர்கள், விற்பவர்கள், —அந்தப் பொழுது போக்குகளை நடத்துப-வர்கள்—இவர்கள் எல்லாரும் நிலையான செல்வர்களாகவும், அவற்றில் ஈடுபடுபவர்கள் நிலையான ஏழைகளாகவுமே உள்ள நிலைகளை நாம் உணரத்தவறி விடுகின்றோம். வேண்டுமென்றே மக்களை வறுமையுள்ளவர்களாகவும், கெட்டுப் போகின்றவர்களாகவும் செய்ய ஒரு புறம் வாய்ப்பளிப்பது; மறுபுறம் அதைத் தவிர்க்கக் கட்சி சேர்ப்பது, அரசமைப்பது, திட்டம் வகுப்பது; சட்டம் போடுவது! இந்த மூடநம்பிக்கைச் சுழற்சியிலேயே மக்கள் எத்தனைக் காலத்துக்கு அறைபட்டுச் சாவது?

ஒரு புறம் 'புராணம்' படிப்பது; மறுபுறம் 'அறிவியல்' வளர்ப்பது. ஒரு பக்கம் 'பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்தால் படிப்புவரும்' என்பது. மறுபக்கம் பள்ளிக்கூடப் பாடத் திட்டங்களை அடிக்கடி சீர் திருத்துவது. ஒரு புறம் கோயில் குடமுழுக்குகளைச் செய்து கூத்தடிக்க வும், கொள்ளையடிக்கவும் வாய்ப்பளிப்பது; மறுபுறம் சீர்திருத்தச் சட்டங்களையும், காவல் கண்காணிப்புகளையும் பெருக்குவது. ஓரிடத்தில் பிள்ளை பெறுவதும், செல்வம் பெறுவதும் தெய்வத்தின் செயல் என்று வாரிகளையும் பூரிகளையும் வைத்துக் கதையளப்பு களைச் செய்ய இடந்தருவது. மறுபுறம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களையும், நிலச் சீர்திருந்தங்களையும், செல்வ வரம்புகளையும்

கொண்டு வரச் சட்டங்களைப் போடுவது. ஒரு பக்கம் போலிப் பொருள்களையும், அவை பற்றிய புனைசுருட்டு விளம்பரங்களையும், வானொலியிலும், செய்தித் தாள்களிலும் செய்யவும், தெருக் கடைகளில் விற்கவும், அரசினரே வாய்ப்பளிப்பது; மறுபக்கம், அவற்றால் நாட்டுக்குக் கெடுதி—மக்களுக்குக் கெடுதி—என்று மருத்துவர்களையும் அறிஞர்களையும் கொண்டு அதே வானொலியிலும் செய்தித் தாள்களிலும் கதையளப்புகளைப் பண்ணச் செய்வது. ஒரு புறம் காலிப் பயல்களையும் கூலிக் கலைஞர்களையும் விட்டுப் படுகீழ்மையாகவும், கயமையாகவும் பாட்டெழுதவும், படமெடுக்கவும் செய்து மக்கள் கெட்டுப்போக அரசினரே வழி வகுப்பது; மறுபுறம் மக்கள் பண்பாடு சீர்குலைவதற்கும், கேடுகள் மலிவதற்கும் குழுக்களைப் போட்டுக் காரணியங்களை ஆராய்ந்து, 'வழு'க்களைக் கண்டு பிடித்துக், கோடி கோடியாய்ப் பணத்தைச் செலவழித்து, அறம் பேண முயல்வது.

—இவையெல்லாம் மூளைக்குழப்பக்காரர்களும், முடிச்சு மாறிகளும் நிறைந்த நாட்டில்தான் நடக்க முடியுமே தவிர, கொஞ்சமேனும் அறிவுள்ளவர்கள் உள்ள நாடுகளில் நடைபெற முடியாது. ஒருவனைப் 'பூணூல்' போடுவதற்கும், 'பிரமன்' என்னும் 'பொட்டை'யனின் முகக் குறியில் தோன்றினான் என்பதால் 'பிராமணன்' என்று அழைத்துக் கொள்வதற்கும், சட்டப்படி உரிமை கொடுத்து விட்டு, இன்னொரு புறத்தில் தீண்டாமைத் தடுப்புச் சட்டம் கொண்டு வருவதும், மண்டுகள் அமைச்சர்களாய் உள்ள இந்த நாட்டில்தான் நடக்கும்! —இவ்வாறு வறுமைக்கும், மூட நம்பிக்கைக்கும் வழி திறந்து விட்டு விட்டு, அவற்றைப் போக்குவதற்கு அதிகாரத்தையும் ஆளுமையையும் பயன்படுத்தி—உமி குத்திக் கைநோகும் உன்மத்தம் பிடித்த அரசை உலகில் வேறு எந்த நாட்டிலும் காணவே முடியாது.

சோம்பலும் வறுமையும் மூடநம்பிக்கையும் இந்நாட்டில் எங்கணும் தாண்டவம் ஆடிக் கொண்டிருக்க, ஆங்காங்கு நடக்கும் 'பச கோவிந்தங்'களாலும், 'அரே ராமா' 'அரே கிசுணு' கூச்சல்களாலும், 'அல்லா அல்லா' பாடல்களாலும், 'ஏசுநாதர் பேசினால்' போன்ற வறட்டுக் கத்தல்களாலும் என்ன பயன் விளையுமென்று எதிர்பார்க்கின்றனரோ தெரியவில்லை? பசியால் நொடியும் மக்களிடத்தில் இக்கத்தல்கள் இன்னும் வறுமையை உண்டாக்கத்தானே செய்யும். இதுவுமன்றி, இவை போலும் திரைப்படப் பாட்டாசிரியர்கள் எழுதும் காமக் கழிசுவை நிரம்பிய பாடலடிகளைப் பாடிக் கொண்டுதானே இந்நாட்டின் இளவட்டங்கள் சோம்பலால் நாட்டில் பொறுப்பற்றுக் கிடக்கின்றன.

எங்கோ நடக்கின்ற பந்து விளையாட்டை மணிக் கணக்கில், நாள் கணக்கில், இங்குள்ள வானொலி நிலையங்கள் அத்தனையும், வேலை மெனக்கெட்டு, மின்சாரத்துக்குக் கேடாக ஒலிபரப்புவதும், அதனை ஊரில் உள்ள மொட்டைப் பயல்களும், பார்ப்பன விடலைகளும், வாண்டுகளும் உறங்குகையிலும், உடுக்கையிலும், உண்கையிலும், நடக்கையிலும், ஊர்திகளில் செல்லுகையிலும், பள்ளிகளிலும் அலுவலகங்களிலும், தெருக்களிலும், கடைகளிலும், கழிவகங்களிலும்–என அங்கிங்கெனுதபடி எங்கும் அவ்வானொலிப் பெட்டியைத் தூக்கிக் கொண்டே அலைந்து கேட்பதும்–என்ன நாகரிகமோ, தெரியவில்லை? இதுபோலும் போலி நாகரிகங்களையும் பொழுது போக்குக் கூடங்களையும் உருவாக்குவதில்தான் நம் அரசுக்கு எத்துணைச் சுறுசுறுப்பு! அந்த விளையாட்டுகளை வானொலியில் பரப்புவதால், எத்தனை வயல்களில் 'பசுமை'ப் புரட்சி நடக்கும் என்று எதிர்பார்க்கின்றனர், இந்த ஊரையாள்கின்றவர்கள்? காலை 5 மணி முதல் இரவு 11 மணி வரை இந்த வானொலி நிலையங்களுக்கு என்ன மணியம்...? காலையில் இரண்டு மணி நேரம், மாலையில் இரண்டு மணி நேரம், இன்றியமையாத செய்திகளைப் பரப்பவும், இனிய நல்லிசைப் பாடல்களை ஒலிபரப்பவும் எடுத்துக் கொண்டால் போதாதா? நாள் முழுவதும் ஒலிபரப்பு நடைபெறுவதால்தானே பாட்டுக்கும் கூத்திற்கும் இத்துணை மதிப்பும் பெருமையும் ஏற்பட்டு, நாட்டு அரசியலிலும், மக்கள் நலத்திலும் இத்தனை இழிந்த நிலைகள் ஏற்பட்டு விட்டன!

இங்குள்ள செய்தித் தாள்கள் இந்த நாட்டுக்கு வாய்த்த சாவக் கேடுகள்! ஓரிரண்டு இதழ்கள் தவிரத் தமிழ் நாட்டில் நடத்தப்படும் தாள்கள் எல்லாவற்றிலும் தமிழும் போற்றப்படுவதில்லை; தமிழ்ப் பண்பாடும் பேணப்படுவதில்லை. தமிழகத்தின் இக்காலத் தரக் கேடுகளுக்கெல்லாம், ஆதித்தனின் 'தினத்தந்தி'யே தலையாய காரணியமாகும். அதைப் பார்த்துத்தான் 'இராணி' 'குமுதம்' 'தினமணிக் கதிர்' போன்ற கழிசடை, குப்பைத் தொட்டி இதழ்களிடத்திலெல்லாம் நரகலின் மேல் ஈக்களுக்கிருக்கும் ஓர் இழுப்பைப்போல், 'இளசு'களுக்கு ஓர் 'இளகல்' ஏற்பட்டு விட்டது. நினைத்தவனெல்லாம் நினைத்தபடி எழுதி, நாட்டையும் மக்களையும் கீழ்மைப் படுத்துவதற்கு ஒரு புறம் இடமளிப்பது; இன்னொரு புறம் அக் குப்பை கூளங்களால் வரும் கேடுகளைத் துடைக்க எடுத்துக் கொள்ளும் முயற்சியில் பெரும் பொருளையும் பொழுதுகளையும் வீணடிப்பது...!—இஃது என்ன கோணங்கித்தனம்!

நம் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், மொழி, இலக்கியத் துறைகளில் தமிழையும் தமிழினத்தையும் கெடுப்பதற்கும் காட்டிக் கொடுப்ப

செய்திகள்.

பாவேந்தர், தந்தை பெரியார் பிறந்தநாள் விழா.
(கருநாடக மாநிலம்) வெங்காலூர்.

கடந்த கன்னித் திங்கள் 27-ஆம் பக்கல் (13-10-74) ஞாயிறு மாலை 6 மணியளவில், வெங்காலூர் மெய்நெறிக் கழகத்தில் (Thesophical Society) பாவேந்தர் பாரதிதாசன், தந்தை பெரியார் – ஆகியோரின் பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. புலவர் திரு. வே. கிழார் தலைமை தாங்கினார். அதில் கலந்து கொண்டு ஆசிரியர் பெருஞ்சித்திரனார் சிறப்புரையாற்றினார். புலவர் திரு. தி. நா. அறிவுஒளி, பேரா. சு. சு. இளங்கோ க. மு. ஆகியோரும் உரையாற்றினர். விழா இனிது முடிந்தது. உ.த.க. கருநாடக மாநிலம் ஏற்பாடு செய்திருந்த கூட்டம் இது.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

தற்கும் ஓரிரு வையாபுரிகளும், தெ. பொ. மீக்களும் இருந்ததுபோல், அரசியல் துறையில் ஓரிரு பக்தவத்சலங்களும் சுப்பிரமணியன்களும் இருந்ததுபோல், தாளிகைத் துறையில் ஓரிரண்டு ஆதித்தன்களும் ஆனந்தவிகடன்களும் குமுதங்களும் இருப்பதுபோல், திரைப்படத் துறையிலும் பல பாட்டுக்கேடர்களும், கதைக் கேடர்களும், நடிப்புக் கேடர்களும் இருக்கின்றனர் அவர்கள் பொழுது போக்க வரும் ஏழை எளியவர்களின் உள்ளங்களில் தூவும் நச்சு விதைகள், பல்வகைக் குமுகாயக் குற்றங்களாக மலர்ந்து, காய்த்துக், கனிந்து கொண்டிருக்கின்றன. அம்மரங்களின் கிளைகளில்தாம் நம் நாட்டைக் கெடுத்து வரும் சோம்பலும், வறுமையும், மூடநம்பிக்கையும் கூடுகட்டி, முட்டையிட்டு, அடைகாத்துக் குஞ்சு பொரித்து வருகின்றன. அம்மரங்களை அவ்வப்பொழுது மொட்டை தட்டி, முள்தரித்துக் கட்டுப்படுத்தி வைக்காதவரை, அம் முள்மரங்கள் இக்கால் பரவியுள்ள நச்சுவேல மரம்போல் ஊர் முழுவதும், நாடு முழுவதும் பரவுவது திண்ணம்! அக்கால் அவற்றைக் களையக்கூட முடியாது. அவ்வாறு களைய முற்படினும், களைவார் கைகளை அவை கொல்லும் என்பது திருக்குறளுறுதி! இதனை ஆட்சியாளர்கள் உணர்ந்து செயல்படுவார்களாக!

பெருஞ்சித்திரன்.

பழனிச்சாமி-கலைச்செல்வி [சரசுவதி] நீடு வாழி!

சென்ற நளித்திங்கள் 5-ஆம் பக்கல் (20-11-74) அறிவன் காலை 6 மணியளவில், கோவை, அவநாசியில் புலவர் **வை. பழனிச்சாமி**—கலைச்செல்வி (சரசுவதி) அவர்களின் திருமணம், ஆசிரியர் கூட்டணிச் செயலர் திரு. **அ. சாமிநாதன்** அவர்கள் தலைமையில் நடந்தது. அப்பொழுது, ஆசிரியர் கூட்டணிப் பொதுச் செயலர் திரு. செ. **முத்துசாமி**, (சட்ட மன்ற மேலவை உறுப்பினர்), திரு. **மா. கணேசன்**, க. மு. ப. இ, திரு. **முத்துக்குமரன்**, திரு. **மறை. நித்தலின்பன்**, திரு. **இரா. நாராயணசாமி**, திரு. **ந. சிவசங்கர நாராயணன்** ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இறுதியில் ஆசிரியர். **பெருஞ்சித்திரனார்** அரியதொரு சொற்பொழிவாற்றி மணமக்களை வாழ்த்தினர். அவ் வட்டாரத்தில் அவ்வுரை நல்ல விழிப்புணர்வை ஊட்டியது என அன்பர் பலரும் மகிழ்ந்தனர்.

திரு. சு. மேழிவளவன்-பொற்செல்வி நீடுவாழ்க!

கடந்த நளித்திங்கள் 9-ஆம் பக்கல் (24-11-74) ஞாயிறு காலை 9-30 மணியளவில், தசடுர், அரூர் வட்டம், மோளையனூரில், தென்மொழியன்பர் திரு. **சு. மேழிவளவன்—பொற்செல்வி** அவர்களின் திருமணம் திரு. **வே. இரா. வேங்கன்** அவர்கள் தலைமையில் நடந்தது. **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் வாழ்த்துப் பேருரை நிகழ்த்தினர். சிற்றூர்ப்புறங்களிலிருந்து ஏராளமான கூட்டம் வந்திருந்தது. அனைவர்க்கும் அவ்வுரை மிக்க விழிப்புணர்ச்சியையும் தமிழுணர்வையும் ஊட்டியது.

கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக்கல்லூரி-மேலூர்.

கடந்த 30-11-74 காரி காலை 10-30 மணியளவில் மதுரை, மேலூர் கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக்கல்லூரி மாணவர் பேரவைச் சார்பாக, அக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் தலைமையிலும், கல்லூரி முதல்வர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையிலும், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு நடந்தது. மாணவ, மாணவியர் மிக அமைதியாக இறுதிவரையிருந்து பேச்சைக் கேட்டதும், அவர்களிடை இப்பேச்சு ஒரு விறுவிறுப்புணர்வையும், அழுந்திய தமிழ்ப்பற்றையும் ஊட்டியதும், குறிப்பிடத்தக்கன. ஆரியப்பார்ப்பனர் எவ்வகையில் தமிழையும் தமிழினத்தையும் கெடுத்து அடிமைப்படுத்தினர் என்பது பேச்சில் விரித்துரைக்கப் பெற்றது. கூட்டத்தை மாணவர் தலைவர் கி. மகேந்திரன் (க.இ. 3-ஆம் ஆண்டு) ஏற்பாடு செய்திருந்தார்.

அடுத்த தமிழக விடுதலை மாநாடு சென்னை நகரில் விரைவில் நடைபெறும்.

நூறாசிரியம்.

பெருஞ்சித்திரன்.

பாட்டு : ௧௪

சொல்லொடு புனையின் புல்லெனப் போமே;
சொல்லின் றமையின் இல்லென் றிழிமே!
ஒன்றுபா ராட்டி னொன்றுசீர் குன்றும்
நின்றுயிர் இயங்க லொன்றே சாலும்
இன்றுபோல் வதுவே எதிர்ந்தவந் நாளே
அன்றன்று புதிதவ னணைப்பே
என்றும் அகத்தது இனிதவன் நினைவே!

பொழிப்பு :

சொற்களைக் கொண்டு புனைந்துரைப்பின் (அவன் அன்பு) புல்லியதாகப் போகும். சொல்லப் பெறாமல் அமைந்துவிடின் அஃது இல்லையென் றாகும்; அந்நிலை மிக இழிந்தது! (அவன் அன்பு நிலைகளில்) யாதானும் ஒன்றைப் பாராட்டியுரைப்பின், பிறிதொன்றினது பெருமை குறைவு படும். என் உயிர் இன்றுகாறும் உடலில் நின்று இயங்குவதொன்றே (அவன் என்பால் காட்டும் அன்புக்குப்) பெருமை தருவதாகும். இன்று போலவே உள்ளது, அவன் முதன்முதல் வந்து என்முன் எதிர்ப்பட்ட நாள்! அன்றன்றைக்கும் புதியதாகும் அவன் அன்பு நிறைந்த தழுவல்! (அவ்வன்பு நிலை யாவும்) என்றைக்கும் என் உள்ளத்தது; இனிது ஆகும், அவனைப் பற்றிய நினைவு!

விரிப்பு :

இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

இல்லிருந்து அறம் பேணிவரும் தலைவியைத் தோழி, 'அவன் அன்பு எத்தகையது' என்று வினவ, 'அது சொற்களைக் கொண்டு புனைந்து சொல்லுந் தகையதன்று; அவ்வாறு சொல்லின் அது புல்லியதாகப் போய்விடும்; இனி, சொல்லாதும் நினக்கு விளங்கா தாகையால் அஃது இல்லையோ என ஐயுறவுக் கிடமாகி இழிவு பெற்று

விடும். அவனது அன்பின் பெருமை நிகழ்ச்சிகளில் ஒன்றை எடுத்துக்கூறின், மற்றொன்று பெருமையில் தாழும்; என் உயிர் இன்றுவரை உடலில் பொருந்தியிருப்பதே அவ்வன்பின் பெருமையை உரைக்கப் போதுமான சான்றாகும்; அவன் என்முன் வந்து மகிழ் வூட்டிய அந்த முதல்நாளைப் போன்றே, இன்றும் எனக்குக் காட்சி தருகின்றான், ஒவ்வொரு நாளும் புதியதாகும் அவன் தழுவல்; என்றைக்கும் அவன் அன்பு என் அகத்தில் நிறைந்து இன்பம் தருகின்றது; அவனைப்பற்றிய நினைவே எனக்கு இன்பம் தருவ தாகும்' என்று உரைத்து, தலைவனது அன்பின் பெருமையை உணர்த்துவதாகும் இப் பாட்டு.

சொல்லொடு புணையின் : சொற்களைக் கொண்டு புனைந்துரைப் பின். என்னை? 'புணையினும் புல்லென்னும் நட்பு' என்றாராகலின். அவன் அன்பு சொற்களால் புனைந்துரைப்பது அன்று. சொற்களால் அமைந்து விடுவதன்று, என்பதாகும்.

புல்லென : புல்போல் எளிமை சான்றது. புல்லியதாக.

சொல்லின் றமையின் : சொல்லாமல் அமைந்து விடுவதெனின்.

இல்லென்று இழிம் : இல்லை என்றாகி இழிந்ததுபோல் ஆகி விடும். அவன் அன்பைப்பற்றி ஒன்றும் கூறாது அமைந்து விடுவே னாயின், ஒருவேளை அவன் அன்பாக நடந்து கொள்வதில்லையோ என்று பொருள்பட்டு அவன் பெருமைக்கே இழிவாகி விடும்.

ஒன்று பாராட்டின் ஒன்று சீர் குன்றும் : அவன் அன்புச் செயல் களில் ஏதானுமொன்றை எடுத்துப் பாராட்டிப் பேசின், மற்றைய வகைகளில் அவன் அன்பின் பெருமை குறைவுபடும்; ஆகையால் அதுவும் பிழையாகி விடும்.

நின்றுயிர் இயங்கல் : என் உயிர் இன்று வரை என் உடலி னின்று இயங்கிக் கொண்டிருப்பதே.

ஒன்றே சாலும் : அவன் அன்பு சிறந்ததாக உள்ளதென்று அவ்வொரு நிலையினாலேயே எண்ணிக்கொள். அவ்வாறில்லை யாகின் என் உயிர் என்றோ என் உடலை விட்டுக் கழிந்திருக்கும் என்பது பொருள்.

இன்று போல்வது : இன்றைக்குப் போல் உள்ளது.

எதிர்ந்த அந்நாள் : அவன் என்முன் எதிர்ப்பட்டுத் தலைக் கூடிய அந்த நாள்.

அவன் என்னைக் கூடிய முதல் நாளைப் போன்றே, இன்றும் அன்பு நிறைவால் அவன் நடந்து கொள்கின்றான் என்க.

அன்றன்று புதிது, அவன் அணைப்பு: அவனது தழுவல், ஈடு-பாடு-அன்றன்றும் புதியதாகவே எனக்குப் படும்படி அவன் அன்பைப் பொழிகின்றான் என்றபடி.

என்றும் அகத்தது: அவன் நிறைந்த அன்பு என்றும் என் அகத்தை ஆட்கொண்டுள்ளது, அது புறத்தே கூறுதற்கியலாதது. எனவே சொற்களால் புணர்ந்து கூற முடியாது என்க.

இனிதவன் நினைவு: அவன் நினைவு ஒன்றே எனக்கு இன்பம் பயப்பது. மேற்சி இன்னும் இனியதாம் என்க.

'அவன் அன்பு எத்தகையது, சொல்'—எனக் கேட்கின்றாய்; அது சொல்லுந்தகையதன்று; சொல்லாமல் வாளா அமைந்திருக்கும் தகையது மன்று. அவனைப் பற்றி யாதானும் ஒன்றைக் கூறுவதாயின் மற்றொன்று பெருமை இழக்கும். என் உயிர் உடலில் உறைந்திருப்பதொன்றினாலேயே நீ உய்த்துணர்ந்து கொள், அவ்வன்பு உண்மையது என்பதை. அவ்வாறில்லாவிடின் நான் என்றோ உயிர் துறந்திருப்பேன். அவன் முதல் நாள் என்னைக் கண்டது போலவே, இன்றும் நடந்து கொள்கின்றான். அவன் அன்பு ஒவ்வொரு நாளும் புதிய உணர்வை எனக்கு ஊட்டுகின்றது. அவ்வன்பு உணர்வு புறத்தே எடுத்து கூறற் கியலாதது; உள்ளத்தே உறைந்து நிற்பது. அவன் நினைவே எனக்கு இனியதாகப் படுகின்றது; எனின், அவன் செயல்களைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ? வேண்டா'—என்றபடி, என்க.

இது, முல்லைத் திணையும், பெருமையின்றறியா அன்பைப் புகழ்ந்தது என்னுந் துறையுமாகும். O

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	12 உருபா	15 உருபா	20 உருபா.
அரையாண்டுக் கட்டணம்:	6 உருபா	7-50	10 உருபா.
தனியிதழ்:	1 உருபா	1-25	1-75

ஓரிதழுக்கு உரு. 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

உலகத் தமிழரின் ஒற்றுமையை நோக்கி!

(இலங்கை, கண்டி, குரும்பசிட்டி, இரா. கனகரத்தினம் எழுதியுள்ள "உலகத் தமிழரின் ஐக்கியத்தை நோக்கி...!" என்னும் சிறிய நூலின் சில கருத்துகள் இவை. தமிழர், உலகின் எப்பகுதியில் வாழ்ந்தாலும், முதற்கண், அவர்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கிக் கொள்ளும் மொழியுரிமையைப் பெற்றுக் கொள்ளத் தவறுவார்களானல், தாங்கள் பெற விரும்பும் இன உரிமையை எந்த நாட்டினின்றும் பெறும் வல்லமையை அவர்கள் இழந்து போவார்கள். தாய் நாட்டினின்று பிரிந்து அண்டையயல்களிலுள்ள சேய் நாடுகளில் வாழும் எந்தமிழ் மக்கள் இந்த உண்மையை நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் உலகத் தமிழரெல்லாம் ஒன்றுபடப் பாடுபடும் ஓர் உண்மை உள்ளத்தினர். அவரெழுதிய அச்சிறு நூலின் தலைப்பும், செய்திகளும கலப்புத் தமிழில் இருந்தாலும் பொய் கலவாத உணர்வின் எழுச்சி! -ஆசிரியர்)

உலகில் இன்று தமிழனுக்கென்று சொல்லிக் கொள்ள ஒரு தனி நாடு உண்டா? உலகெங்கும் அழிந்து போய்க் கொண்டிருக்கும் நம் இனத்தை அழிவின் விளிம்பிலிருந்து மீட்க உலக ஒன்றிய அவை போலும் உலக அமைப்புகளில் நமக்குப் படியாளுமை ஏதாவது உண்டா? தமக்கென ஒரு நாடின்றி உலகின் நான்கு திசைகளிலும் அலைந்து கொண்டிருந்த யூத மக்களுக்குக்கூட ஒரு நாடு உருவாகியிருக்கின்றதே! ....

... ...மாறுபட்ட பல சூழ்நிலைகளில், உலகின் பல பகுதிகளிலும் குடியேறி வாழும் நம் இனம அங்கு ஏற்படும் அரசியல், குமுகாயப், பொருளியல் தாக்குதல்களுக்கு ஈடு கொடுத்துத் தன் தனித் தன்மையை—தமிழ்த் தன்மையைப் பேணிக் காத்திட நாம் செய்துவிட்ட ஆக்கங்கள் தாம் என்னென்ன?... உலகெங்கும் புலம்பெயர்ந்த தமிழரின் மரபுவழி வந்தோர் இன்று இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, பர்மா, இந்தோனேசியா, வியட்னும், மொறிசியசு, இரீயூனியன், அன்றில் தீவு, தென்னுப்பிரிக்கா, பிசி, தாகித்தி, நியூ கலிடோனியா, இரினிடாது, உதாப்பீகா, குவாடுலோபு, மாட்டினிக்கு, பிரிட்டீசு கயானு, சுரினும், உரொடீசியா, இங்கிலாந்து, கனடா, பிரான்சு முதலிய நாடுகளில் வாழ்ந்து வருகிருர்கள்.

...உலகில் உள்ள மக்கள் தொகுதி பொதுவாக அவர்கள் பேசும் மொழியைக் கொண்டும் அவர்கள் கடைப்பிடித்து வரும் பண்பாட்டு மரபு நிலைகளைக் கொண்டும் இனமுறையில் வகுத்துப் பேசப்பட்டு வருகிறது. மொழி அழிந்தால் அந்த மக்கள் தொகுதியும் இல்லை. இன்று உலகில் தமிழர் வாழும் நாடுகளில், தமிழகத்தையும், சிங்கப்பூர்க் குடியரசையும் தவிர, தமிழ் ஆட்சி மொழியாக இல்லை. எனவே, தமிழனுக்கு என உலகில் ஒரு நாடு தோன்றும்வரை-உலக அரங்கில் அவன் குரல் ஓங்கி ஒலிக்கும்வரை,-அவன் மொழி, கலை, பண்பாடுகளைப் பேணிக்காக்க, அனைத்து நாட்டு இணைப்பு முறையில் ஓர் அமைப்புத் தேவை. O

சென்ற இதழ்த் தொடர்ச்சி:

மறைமலையடிகளாரின் செய்யுள் மாண்பு!

—பெருஞ்சித்திரன்.

"நீயே, யானை வெண் மருப்பும் தேனின் இருலும் மயில் தழைப் பீலியும் மணங்கமழும் சந்தனக் கட்டைகளும் ஒருங்கு கலந்து கிடக்கும் மிகப் பெரிய மலையில் விருப்பம் நீங்காது எழுந்தருளி யிருக்கும் இயல்பினையுடையை!

யனே, ஏழையேன்; பகுத்தறிவில்லாத படிப்பும், உண்மை யில்லாத புகழும், தவறிய ஒழுக்கமும், கழுவிய கற்றுத குற்றமும், ஒன்றுய்ப் பொருந்திப் பெரிதான ஆணவம் என்னும் உச்சி கெழுமிய மலைமேல் அமர்ந்து பெருமை பெறுவேன்"

—என்று மக்கள் எல்லாரும் செய்கின்ற குற்றமெல்லாம் தம் மேல் ஏற்றித் தாமே அவ்வாறு செய்யும் பழிகிடந்த ஒரு சிற்றுயிராக இருப்பதன் கீழ்மையை-இறைவனின் பெருமையோடு ஒப்பிட்டுப் பேசுந் திறன் நன்று; மிக நன்று!

நீயே யானைவெண் மருப்புந் தேனின் இருலும்
மயிற்றழைப் பீலியும் விரைகமழ் சாந்தமும்
ஒருங்குதலை மயங்கிய இரும்பெருங் குன்றத்து
ஆனு துறையும் இயல்பினை, யானே
புலமில் கல்வியும் நலமில் புகழும்
வழுவிய வொழுக்கமும் கழுவிய குற்றமும்
ஒருவழி யமைந்து பெருகிய செருக்கெனுங்
கோடுகெழு குன்றிற் பீடுறு குவனே!

—(திரு-ஈகோவை.) (10-35-43).

—மேலும் இறைவற்கும்-அஃதாவது இவர் வணங்கும் முருகப் பெருமானுக்கும், தமக்கும் அஃதாவது தம் போன்ற மக்கட்கும் உள்ள பெருமை சிறுமைகளை உயர்வு நவிற்சியாகவும் இழிவு சிறப் பாகவும் பேசுந் திறனில் அடிகளின் செய்யுள் யாக்கும் திறனும், முருகன் மேல் அவர் கொண்ட பற்றிமையும், அதனை நயம்படக் கூறும் பெற்றிமையும் இனிதே விளங்குவதைக் காண்மின்கள்!

இறைவன்,

"கருமணல் முடங்கினுற்போல் நெளிதல் உள்ள மயிர்த் தொகுதியும், எட்டாம் பிறைத்திங்களைப் பொருந்தினுற் போன்ற மணம் வீசும் நெற்றியும், இரண்டு கெண்டை மீன்களை முகஞ் சேர்த்து வைத்தாற்போல் அகன்ற இரண்டு கண்களும், இளைய எள்ளின் மொட்டு அரும்பினுற் போல் அமைந்த மூக்கும், பளிங்கிற் போல அசைந்து நிழலாடும் விளக்கத்தினையுடைய கன்னங்களும், வள்ளைத் தண்டை ஒத்த தெளிந்த ஒளியையுடைய செவிகளும், இங்குலிகத்தில் தோய்த்தெடுத்த இலவம் பூவை ஒக்கும் சிவந்த வாயிதழும், புன்னகை மலருங்கால் மின்போலும் ஒளிவிடுகின்ற குறிய முத்துப் போன்ற சிறிய முட்களை ஒத்த பற்களும், செழுமையான நீர்வாழ் சங்கை ஒக்குஞ் சிறந்த கழுத்தும், ஏழையர்க்கு அருள் செய்யும் இயல்பினுல் அருள் தன்மை வாய்ந்த அருட்கையும், சிவிறியை விரித்து வைத்தாற் போன்ற சிறிய திருவடிகளும், தம் உள்ளத்தினின்றும் நீங்காத செவ்வியில், இடையறுது தோன்றுமாறு மேன்மை கெழுமிய இடவலப் பக்கங்களில் வேறு வேருக மங்கையர் இருவர் பங்கு கொண்டு இருபக்கங்களிலும் விளங்க சீற்றங் கொண்டு வந்த மயிலின் மேல் எழுந்தருளி வருவாரம்"– அடிகள் முருகனை அவன் வள்ளித் தெய்வானையோடு மயிலூர்தியில் வருவதைக் கற்பனைக் கண் கொண்டு பார்க்கின்றுர்;

" நீயே, அறல்நெறித் தன்ன செறிகுழற் கற்றையும்
பிறைசெறித் தன்ன நறைகமழ் நுதலும்,
கயலிணைத் தன்ன அகலிரு விழியும்,
குமிகைமுகிழ்த் தன்ன அமைவரு மூக்கும்;
பளுங்கின் அன்ன துளங்கொளிக் கதுப்பும்,
வள்ளை யன்ன தெள்ளொளிச் செவியும்,
குலிகந் தோய்த்த இலவுறழ் இதழும்
முறுவல் பூப்ப மின்னென மிளிரும்
குறுமுத் தன்ன சிறுமுள் ளெயிரும்
கொழுநீர்ப் பணிலத்து விழுமிய கழுத்தும்
எமக்கருள் மரபில் தமக்கமை கையும்
சிவிறிவிரித் தன்ன சிறுதிரு வடியும்,
எம்முளம் நீங்காச் செம்மையிற் றேன்ற
வீறுகெழு பகுதியின் வேறிரு மடவார்
கூறுகொண் டிருபுடை விளங்கச் சீறிய
மயின்மிசை வருகுவை"

(10-44-58)

—என்று மகிழ்ந்து பாடிப் புகழ்ந்து ஏத்துகின்றார். அவர் இக் காட்சியைக் கண்டதும், அடிகளார்க்குத் தம்மைப்பற்றியும் தம்மோ டொத்த மக்களைப்பற்றியும் நினைவு வருகின்றது. அதன் இழிவு தெரிகின்றது. ஆனாலும் அதனை உயர்வாகப் பேசுவதுபோல் தம் இழிவையும் தம் மக்கள் இழிவையும் எடுத்துப் பேசுகின்றார். பாடலைப் பாருங்கள் :

..............................யானே
கருநெறி மறமும் அருகிய அறிவும்,
விரிவுறு மயக்கமும் திருகிய சினமும்
தொண்டர்ப் பணியா நாணமும், எண்டோள்
முக்கட் பெருமான் பெரும்புகழ் நக்குச்
சமயக் கணக்கர் அமைவில கூறும்
புல்லுரை கொள்ளும் பொல்லாக் கிழமையும்
வெகுளியொடு படூஉந் தகையின் மாற்றமும்
அறிவோர் நகைப்ப மடவோர் திகைப்ப
பொருளொடு பொருந்தாப் புகுந்துசொன் மொழியும்
உறுவரைப் பேணா தெழுமிறு மாப்பும்
எளிவந் தோரும் இரவன் மாக்களும்
அழுவிளிக் கம்பலை கொள்ளக் குழைவின்றிப்
பழுதுறச் சென்றாங் கெறிந்துநகு முருடும்
அறிவொடு படாஅச் சிறுதொழின் முறைமையும்
நீங்கா மரபின் ஓங்கிப் பொலிய,
யான்என தென்னுங் கூனற் கிழத்தியர்
பெரும்புறங் கவவி வயின்வயின் அமைத்து
மறந்தேர் வாழ்க்கை மயின்மிசை கொண்டு
சிறந்ததோர் திறத்திற் சிவணுவென் அன்றே!

தி. கோவை. (-10-58-77)

—இறைவனாகிய முருகனின் திருக்கோலமும், மக்களாகிய நம்மின் மருக்கோலமும், அவன்றன் ஊர்தியும் துணையும், நந்தம் ஊர்தியும் துணையும் எத்துணை அழகாய் விரித்துக் காட்டப் பெறுகின்றன பார்மின்கள்! அடிகளாரின் கைவந்த சொற்களும் மெய்வந்த நுண்ணுணர்வும் எத்துணை வியக்கத்தக்கன என்பதை ஓர்மின்கள்! இப்பாடல்கள் இருபத் தோராட்டை இளைஞனொருவன் வாயினின்று இக்கால் வருமோ? செவ்விய புலமையும் புன்மை நிலைகளும் எவ்வெவ் வளவில் வேறுபட்டு நிற்கின்றன பாருங்கள்!

தேற்றுப் புலவர் நூற்றிறங் கடுப்ப
எழுவாய் ஓங்கி முறைமுறை தேய்ந்து
கரைசார்ந் தவியுந் திரையே, கரைதொடுத்து
மறுகரை காணது அகன்றுநனி யாழ்ந்து
நல்லிசைப் புலவர் செய்யுள் போலப்
பல்பொருள் செறித்த கடலே!

தி. கோவை. (—16-39-44

—என்று அடிகளார், புலனறிவு முற்றுப் பொய்ப் புலவர் யாக்கின்ற செய்யுட்கும், புலனறிவு முற்றிய பொய்யில் புலவர் யாக்கின்ற செய்யுட்கும் வேறுபாடு கூறுவர். தெளிவடையாத புலவரது நூல், எழுமிடத்துப் பெரிதாய் எழுந்து, பின் வரவரக் குறைந்து சிறிதாகிக் கரைசேர்ந்து அழியும் அலைபோல இருக்குமாம். தெளிவடைந்த நல்லிசைப் புலவரின் செய்யுளோ, ஒருகரை தொடங்கி மறுகரை காணவொட்டாமல் அத்துணைப் பரந்து மிகவும் ஆழமுடைதாயும் முத்து,சங்கு முதலான அரிய பண்டங்களைத் தம் அகத்தே கொண்டிலங்குவதாகவும் உள்ள கடலைப்போல இருக்குமாம். எத்துணைப் பொருத்தம்! எத்துணை அருமை!

இனி, அவரின் இயற்கை தோய்ந்த புலமைக் கொழிப்பிற்கு ஓர் எடுத்துக் காட்டினைத் தொடுத்துக் கூறுவோர்.

நீர்வளங் கவின்ற சீர்வளர் பழனத்து
நெற்குரல் கௌவிய நற்குரல் பைங்கிளி
கானற் காவிற் றுன்விரைந் தெய்திப்
பொன்வீ ஞாழற் பொலிந்தினி திருப்பவும்,
கருங்கழி வாரிய பெரியமீன் குவைஇ
வன்றிறற் பரதவர் முன்றில்தொறும் உணக்குந்
துடிக்கட் துணியல் கொடிக்குலங் கவர்ந்து
மருதங் காவில் பெரிது வைகவும்,
குளனுறை வாழ்க்கை வளநீர்க் கோழி
மனையுறை நீங்கித் துணைகூப் பெயர்ந்து
கால்வழி யோடிக் கழியிற் சேரவும்
..
மருதமும் நெய்தலும் மயங்கிக்''

—கிடக்கின்றதாம்;

எங்குத் தெரியுமா? திருவொற்றியூரில் என்கின்றுர் அடிகளார். நீர்வளத்தால் அழகுபெற்ற சிறப்போங்கிய கழனியில், நெற்கதிரைக்

கொண்டு போகின்றதாம், அழகிய குரலையுடைய பச்சைக்கிளி. அவ்வாறு போகும் கிளி கடற்கரைச் சோலைக்கு விரைவாய்ப் பறந்து சென்று, பொன்னிறமான மலர்களுடைய நாகமரத்தின் மேல் அழகாக அமர்ந்திருக்கின்றதாம். இவ்வாறு மருத நிலத்துக் கிளி நெய்தல் நிலத்துக்குப் போகவும், நெய்தல் நிலத்துள்ள கருங் காக்கைகள் அங்குள்ள பரதவர்கள் தம் வீட்டு முற்றங்களில் உலர்த்தி வைத்திருக்கின்ற, உடுக்கையின் கண்களைப்போல் இரண்டு வட்ட வடிவமாயிருக்கும் சிறிய மீன் உணங்கல்களை வாரிக் கொண்டுபோய் மருத மரங்கள் அடர்ந்த சோலைகளில் அமர்ந்து பெருமிதமா-யிருக்கின்றனவாம்; மருத நிலத்துக் குளத்தின்கண் வாழும் நீர்க் கோழியோ அங்கிருந்து தன் பெடைப் பறவையுடன் வாய்க்கால் வழியாக நீந்திச் சென்று நெய்தல் நிலத்துள்ள கழிகளில் சேர்கின்ற தாம். இப்படியாகத் திருவொற்றியூரின்கண் மருதநிலத்து வளன் களும் நெய்தல் நிலத்து விளைவுகளும் ஒன்றுடனொன்று கலந்து பெரிய திணைமயக்கத்தையே உருவாக்கிக் கொண்டுள்ளனவாம்; அடிகளார் எழுதுகின்றார், பாருங்கள்! எவ்வளவு அழகிய கற்பனை ! இயற்கை எழுச்சி !

இத்தகைய பெருமைமிக்க ஊரின் கண்ணுள்ள முருகனை மும்மணிக் கோவைத் தலைவியின் நெஞ்சம் பொருந்தி மகிழத் துடிக் கின்றது என்கின்றது நூல்! இதன் விரிவை மேலும் விரித்துக் கொண்டு போனால் மிக விரியும் ஆகலின் இதனை இத்துடன் நிறுத்திக் காஞ்சியின் அவலத்தில் சிறிது நெஞ்சங் கரைகுவோம்! ஆம்; மறைமலையடிகளாரின் இரண்டு செய்யுள் நூல்களில் ஒன்று இன்பியல் சான்றது. இன்பம் என்றாலும் சிற்றின்ப இலக்கணமும் பேரின்ப இலக்கியமும் சான்றதாகும். சிற்றின்பக் கரைக்குள் பேரின்பக்கடலை அடக்கிக் காட்டியுள்ளார் அடிகளார். காஞ்சியோ அவ்வாறன்று, இவ்வுலக வாழ்க்கையின் இறுதி யவலத்தை நெஞ்சு அழுங்கக் கரைந்து காட்டுகின்றது. —(தொடரும்)

ஐந்திரமும் பாணினீயமும்

தமிழிலக்கணத்தைப் பின்பற்றிச் சமற்கிருதத்தில் முதன் முதலாகத் தோன்றிய இலக்கணம் ஐந்திரம். அதன் காலம் தோரா. கி. மு. 8-ஆம் அல்லது 6-ஆம் நூற்றாண்டாகும். அதன்பின் கி. மு. 4-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது "அஷ்டாத்யாயீ" என்னும் பாணினீயம். இரண்டும் எழுத்தும் சொல்லும் ஆகிய இரு. கூறுகளையே கொண்டன. —பாவாணர், (தமிழர் மதம்).

அறிவியல் செய்திகள்.

உயிர்வளி பற்றுக்குறை!
இன்னும் 100 ஆண்டுகளில் உலக உயிர்கள் அழியுமா?

உலக உயிரினங்கள் உயிர் வாழ உயிர்வளி (OXYGEN) மிகவும் தேவை என்பது எல்லார்க்கும் தெரியும். உயிரியக்கத்திற்குத் தேவையான அக்காற்றை மாந்தரும் விலங்குகளும் எப்பொழுதும் உள்ளிழுத்தும், நச்சுக் காற்றுன கரிவளியை (carbon dioxide) வெளியே விட்டும் வருவதும் அனைவர்க்கும் தெரியும். ஆனால் நிலைத்திணைகளாகிய செடிகொடி மரங்களோ அதற்கு மாறாகப் பகல் நேரங்களில் கரிவளியை இழுத்து உயிர்வளியை வெளிவிடுவதும், இரவு நேரங்களில் மட்டும் தாமும் உயிர்வளியை உள்ளிழுத்து உயிர் வாழ்வதும் நாமறிவோம்.

ஆனால் மக்கள் அறிவு வளர வளரத் தங்கள் வாழ்க்கை அமைப்புக்குத் தேவையான குடியிருப்புக்காகவும், பயிர் விளைவுக்காகவும் நிலத்தின் மேலுள்ள காடுகளை அழிக்கின்றார்கள். அவ்வாறு கடந்த ஓரிலக்கம் ஆண்டுகளில் இந் நிலவுலகின் மேல் ஐந்துகோடி சதுரக் கற்கள் அளவில் பரவியிருந்த காடுகளில் மூன்றில் இரண்டு பங்கு அழிக்கப்பட்டுள்ளது. இதனால் உயிர்வளியின் உருவாக்க அளவு மிகவும் குறைந்து விட்டது. இஃதன்றி, மக்கள் தாங்கள் சமைப்பதற்குத் தேவையான எரிபொருள்களைப் பயன்படுத்துவதால் உலகில் மொத்தமாகவுள்ள உயிர்வளியில் 27,300 கோடி கல்லெடையுள்ள உயிர்வளி குறைந்துள்ளது. ஆனால் வானில் முன்பு 13,65,000 கோடி கல்லெடையுள்ள உயிர்வளி இருந்ததில் இது 0.02 விழுக்காடே! இருப்பினும்கூட பல வகைகளிலும் உலகம் உயிர்வளியைச் செலவிட்டு வருகின்றது.

உலகிலுள்ள ஊதுலைகளும், மாழை (உலோக)த் தொழிற்சாலைகளும், வேதியல் ஆலைகளும் பிற எரிபொருள் கூடங்களும் ஆண்டு தோறும் 1310 கோடி கல் எடையுள்ள உயிர்வளியைச் செலவிடுவதால் 1400 கோடி கல்லெடையுள்ள கரிவளி உருவாகிறது. இவ்வாறு ஆண்டுக்கு 6 விழுக்காடு கரிவளிவேறு உலகில் மிகுந்து வருகின்றது. இக்கால் காற்றில் கலந்துள்ள உயிர்வளியில் மூன்றிலொரு பங்கு குறையுமானுல், மாந்தன் உயிர்வளிக் குறைவினுல் தொல்லைப் படுவான். மூன்றில் இரண்டு பங்கு குறைந்தால் மாந்தன் உயிருக்கே ஏதமாகும். இப்பொழுது உலகில் இருக்கின்ற உயிர்வளி குறைந்து

வருவது மட்டுமன்று; கரிவளியின் அளவும் கூடிவந்து கொண்டிருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில், இப்பொழுதுள்ள முறைப்படியே உலகம் இயங்குமானால் இன்னும் 100 ஆண்டுகளில் மாந்த இனம் ஒரு நெருக்கடியான கட்டத்தை அடையும். அக்கால் உலக உயிர்கள் அழிய நேருமா?

இக் கேள்விக்கு அறிவியலறிஞர்கள் ஒரே வகையான விடையைத்தான் தருகின்றனர். நாம் இனிமேல் மூச்சு இழுப்பதற்கு மட்டுந்தான் உயிர்வளியைப் பயன்படுத்த வேண்டும். பிற வகையில் அது செலவாவதைத் தடுக்க வேண்டும். எரிபொருள்களைக் கொண்டு நம் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு மாறாக மின்சாரத்தை மிகுதியும் பயன்படுத்த வேண்டும். அனல் மின் நிலையங்கள் வழியாக மின்சாரம் தோற்றுவிப்பதை விட்டுவிட்டு, நீர்மின் நிலையங்கள் வழியாகவே மின்சாரத்தைத் தோற்றுவிக்க வேண்டும். ஆற்று நீரின் வேகம், கடலலைகளின் விசை, காற்று வேகம், கதிரவன் வெப்பம், நிலத்தின் உட்புற வெப்பம், அணு வெப்பம் முதலியவற்றைக் கொண்டே மின்னாற்றலை உருவாக்க வேண்டும். இவையேயன்றிக் காற்று மண்டிலத்தை நச்சுப்படாமலும், மாசு அடையாமலும், கரிவளி கூடாமலும் காக்க வேண்டும். இவ்வாறெல்லாம் செய்யத் தவறுவோமானால் உயிர்வளியின் கடும் பற்றுக் குறைக்கு உலக உயிர்கள் ஆளாகி, இந் நிலவுலகத்தில் உயிர்கள் படிப்படியாக, மிகவும் சில ஆயிரம் ஆண்டுகளில், அழிந்து உலகமே வெறுமையாகப் போவது திண்ணம். ஆனால் இவற்றை யார் செய்வது? அறிவியலறிஞர்களா, மக்களா, அரசா—அதைப் பொறுத்துத்தான் இதன் விடையும் விளைவும் இருக்கும்.

செவ்வாய்க் கோளுக்கு மாந்தன் போக முடியுமா? முடியலாம்!

செவ்வாய்க்கோள் எத்தன்மை வாய்ந்ததாகவும் இருக்கட்டும். பல இலக்கம் ஆண்டுகளுக்கு முன் அங்கு உயிரினங்கள் வாழ்ந்து இக்கால் அழிந்தும் இருக்கலாம். அல்லது உயிரினங்களே அங்குத் தோன்றாமலும் இருக்கலாம். ஆனால் அக்கோளுக்கு மாந்தன் போவது முடியக்கூடிய ஒரு செயலே என்கின்றனர், அறிவியலறிஞர்கள்! செவ்வாய்க் கோளுக்கு மாந்தன் போவது நல்லதே! அங்கு அவனுக்கு அரிய பல அறிவியல் விளக்கங்கள் கிடைக்கும். நாம் வாழும் உலகத்தைப்பற்றிய அறிவு அங்குப் போவதால் சட்டாயம் மிகும்.

ஆனால் அங்கு மாந்தன் போக முடியுமா? அவ்வாறு ஒரு முயற்சி நடைபெறுமானால் அச்செலவு ஒரு நீண்ட காலச் செலவாகவே அமையும். நாம் வாழும் நிலமும் செவ்வாயும் ஏறக்குறைய ஒரே நிலையில் கதிரவனைச் சுற்றிச் சுழல்பாதையில் செல்கின்றவையாகும். எனினும் அவற்றின் சுழற்சிக் காலம் சமமானதுமன்று; ஒன்றுக்கொன்று ஒரே சீரான தொடர்புடையதுமன்று. அதன் விளைவாக, நிலத்திற்கும் செவ்வாய்க்கும் இடையே உள்ள தொலைவு பெருமளவு வேறுபடுகின்றது. சில வேளைகளில் அது $3\frac{3}{4}$ கோடி கற்களாகும். வேறு சில வேளைகளில் $23\frac{3}{4}$ கோடி கற்களாகவும் உள்ளது. $23\frac{3}{4}$ கோடி கற்களாக இருக்கும்பொழுது இரு கோள்களும் கதிரவனுக்கு இருபுறமும் இருக்கும். என்றாலுங்கூட, குறைந்த பக்கச் செலவுக் காலமும், குறைந்த பக்க எரிபொருள் செலவும் ஏற்படுமாறு நாம் சுழற்பாதையைக் கணக்கிட்டுத் தேர்ந்தெடுக்க முடியும்.

நாம் செல்லவிருக்கும் பாதையைத் தேர்ந்தெடுக்கும்போது, விண் கப்பலின் புறப்பாட்டு எடையைக் குறைவாக வைத்துக் கொள்வது நல்லது. செவ்வாய்க்கு நாம் விண் கப்பலை ஏவுவதற்கு 2 அல்லது $2\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் சில நாட்களே ஏற்ற காலமாகும். செவ்வாய்க்கோளை நாம் அடைய 259 நாட்கள் பிடிக்கும். திரும்பி வரவும் அதே காலம் ஆகும். ஆனால் அங்குப் போகின்றவர்கள் 450 நாட்கள் அங்கேயே காத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான், மீண்டும் 259 நாட்களில் நம் நிலவுலகத்திற்குத் திரும்பி வருவதற்கான சரியான பாதை கிடைக்கும். அவ்வாறானால் நாம் செவ்வாய்க் கோளுக்குப் போய்த் திரும்புவதற்கான செலவு நாட்கள் மொத்தம் 968 நாட்கள் அல்லது இரண்டு ஆண்டு எட்டு மாதங்கள் ஆகும்.

கோள்களின் சில குறிப்பிட்ட இயக்க நிலைகளைப் பொறுத்து, சில வேளைகளில் இச் செலவுக் காலத்தை இன்னும் குறைக்கவும் இயலும். அதன் மூலம் நமக்கு வேண்டிய ஆற்றல் தேவைகளை இன்னும் குறைக்கவும் முடியும். அப்படி ஒரு நாளை-நாம் கணித முறையில் தேர்ந்தெடுப்போமானால் அக்காலம் 1981-ஆம் ஆண்டு தான் வருகிறது. 1981-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 28-ஆம் பக்கல் நாம் இந்நிலவுலகிலிருந்து புறப்பட வேண்டும். அப்படிப் புறப்பட்டால் நாம் 220 நாட்களுக்குப் பின்னர் செவ்வாயை நெருங்கலாம். அதாவது 1982 ஆகச்டு மாதம் 4-ஆம் பக்கல் நாம் போகும் விண் கப்பல் செவ்வாயில் இறங்கும். செவ்வாயில் இறங்கி, ஆய்வுகளை

மேற்கொள்வதற்கு ஆய்வாளர்களுக்கு 20 நாட்கள் பிடிக்கும். பின்னர் 1982 ஆகச்டு 24-ஆம் பக்கல் அங்கிருந்து புறப்பட்டால் 1983 மார்ச்சு மாதம் 29-ஆம் பக்கல் அவர்கள் இவ்வுலகை வந்தடைவார்கள். எனவே, இச்செலவிற்கு மொத்தம் 456 நாட்கள் ஆகும்.

இதுதான் செவ்வாய்க் கோளுக்கு மாந்தன் போவதற்குரிய மிகவும் குறுகிய காலமாகும். ஆனால் இந்தக் காலத்திற்குள் மாந்தன் எத்தனை எத்தனையோ இன்னல்களையும் சிக்கல்களையும் தீர்த்தாகல் வேண்டும். அவை இன்னும் தீர்க்கப்படவில்லை. முதன் முதல் அவ்வாறு போகின்றவர்களுக்குத் தேவையான உணவு, நீர், உயிர்வளி ஆகியவை பெருமளவு தேவைப்படும். 18 மாதங்களுக்குப் போதுமான அளவு அவை திரட்டப்படல் வேண்டும். சில சிறப்பான முறைகளின் மூலம் மாந்தனது உயிர் வாழ்க்கையின் இயக்க விளைவுகளையே மீண்டும் மீண்டும் பயன்படுத்திக் கொள்வதற்கான அமைப்பை விண்கலத்தினுள் தோற்றுவிக்கும் வழிவகைகளை விண்வெளி அறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

புதிய கட்டுப்பாட்டு அமைப்புகளையும், தன்னியக்கத் தொலை இயந்திரக் கருவிகளையும் உருவாக்குவது மிகவும் தேவையாகும். இப்போதுள்ள அத்தகைய அமைப்புகளில் எதுவுமே பழுதற்று, நீண்டகாலம் உழைக்கும் திறன் படைத்ததாக இல்லை. எனவே, உயர்ந்த அளவு நம்பகத்தன்மை வாய்ந்த கருவிகளையும், பொறிகளையும் உருவாக்குதல் வேண்டும். அது மட்டுமன்றி, முடுக்கமான மருத்துவ, உளவியல் சிக்கல்களையும் நாம் தீர்த்தாகல் வேண்டும். எடுத்துக் காட்டாக, அத்துணைக் காலம் மாந்தன் எடையற்ற ஒரு நிலையில் வாழ இயலாது. எனவே விண்கப்பலினுள் செயற்கை முறையில் நில ஈர்ப்புத் தன்மையை நாம் உருவாக்கியாக வேண்டும். செவ்வாய்க் கோளுக்குச் செல்லும் விண்கப்பலை நாம் செல்ல வேண்டிய விண்வெளிப் பாதையில் கொண்டு சேர்ப்பது இன்னொரு கடினமான சிக்கல். நிலவுலகத்தைச் சுற்றிய சுழற்பாதையில் செல்லும் அத்தகையதொரு கப்பலின் எடை பலநூறு கல்லெடை (Ton) கொண்டதாக இருக்கும். அவ்வளவு எடையுள்ள ஒரு பொருளை நாம் இதுவரை விண்வெளியில் ஏவியதில்லை. இவ்வளவு சிக்கல்களையும் நாம் தீர்த்துக்கொள்ளும் பொழுதுதான் நம் செவ்வாய்ச் செலவு நனவாக முடியும்! இல்லையெனில் அஃது ஒரு கனவாகவே இருந்துவிடும்.

0

வரப் பெற்ற நூல்கள்.

(நூல் நிறைக்காக வரப்பெற்ற நூல்கள் இவை.
இவற்றில் சில, பின்னர் விரிவாக
நூல்நிறை செய்யப் பெறலாம்.)

இலக்கண நூல்கள்.

1. செய்யுள் இலக்கணம்—ஆசிரியர், புலவர் ச: பாலசுந்தரம் பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை;—வெளியீடு: தாமரை வெளியீட்டகம், 154-89 வடக்குப் பெருந்தெரு, தஞ்சாவூர்1, விலை: 0.60.—பக்கங்கள்: 28. சிறப்புக் குறிப்பு: 131 இனிய எளிய நூற்பாக்களையும் அடிக்குறிப்புகளையும் கொண்ட நூல். மாணவர்களுக்கும் பாடல்கள் எழுத விரும்புவோர்க்கும் கையிலிருக்க வேண்டிய பயனுள்ள நூல்.

2. பைந்தமிழ்ப் பாட்டிலக்கணம்; ஆசிரியர் பெயர் குறிப்பிடப் பெறவில்லை—வெளியீடு: இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர் விலை: 0.40.—பக்கங்கள்-24. சிறப்புக் குறிப்பு: பாட்டெழுதத் தேட்டமொடு வேட்டெழுந்த மனமே-நீ, பார்த்தெழுதக் கோத்தெழுத வார்த்தெடுத்த திதுவே!-என முகப்பட்டைப் பாடல் நூலை அறிமுகப் படுத்துவது, பொருத்தமும் உண்மையுமாகும்;

பாடல் நூல்கள்.

1. முன்னேற்ற முழக்கம்: ஆசிரியர். பாவோகி. சுத்தானந்த பாரதியார்—வெளியீடு: சுத்தானந்த நூலகம், யோக சமாசம், அடையாறு, சென்னை 20 – விலை: 1.50 – பக்கங்கள் 140. சிறப்புக் குறிப்பு: முன்னேறு, தலைநிமிர் தமிழா, எழுச்சி, தமிழ் அன்னை முதலிய 126 தலைப்புகளில் பாடப்பெற்ற உலகளாவிய சமயப் பொதுப் பாடல்கள் கொண்ட தொகுப்பு இது. உணர்வும் உண்மையும் நிரம்பிய நூல். வடமொழிக் கலப்பு ஏராளம்.

2. திருவுருமாமலைச் சிலேடை வெண்பா: ஆசிரியர் செழும் பாச்செம்மல், புலவர் தி. சு. ஆறுமுகனார் – வெளியீடு: இலக்கிய வட்டம், திருநெல்வேலி நகர்—விலை குறிக்கப்பெறவில்லை.—பக்கங்கள் 45. சிறப்புக் குறிப்பு: குறுக்குத்துறை முருகன் மேல் பாடிய 103 சிலேடை வெண்பாக்கள் கொண்டது இந்நூல். பாடல்கள் இயற்கையுணர்வொடும், இனிமை நடையொடும், அழகிய தமிழில் அருமையாகப் பாடப்பெற்றவை. இலக்கியவுணர்வினார்க்கு நல்ல பாவிருந்து. சமயவுணர்வினார்க்கு நல்ல மாமருந்து. என்றும் நிலைக்கின்ற பாடல்கள்.

3. சிவனம்மாள் செய்யுள் திரட்டு: ஆசிரியர்: செழும்பாச் செம்மல் புலவர் தி. சு. ஆறுமுகனுர்-வெளியீடு: தி.சு.ஆ. சரவணப் பெருமாள், கைலாசபுரம், திருச்சிராப்பள்ளி-14-விலை: குறிக்கப்பெற வில்லை-பக்கங்கள்: 40. சிறப்புக் குறிப்பு: நூலாசிரியரின் துணைவி யார் மறைவு குறித்து எழுந்த துயரப்பாக்கள் (Mournful Poems) கொண்ட அருமையான இரங்கல் நூல் (Elegy) இது: ஆசிரி யரின் நெஞ்ச ஓலத்தில் தமிழின் சுவை கரைந்து ஒழுகுகின்றது. நல்ல இலக்கியம்.

4. மழலைத்தேன்: ஆசிரியர். புலவர். ச. பாலசுந்தரம். தமிழ்ப் பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி. வெளியீடு: தாமரை வெளியீட்டகம், 154/89, வடக்குப் பெருந்தெரு, தஞ்சாவூர்-விலை: 2-50-பக்கங்கள். 112. சிறப்புக் குறிப்பு: மழலை அமிழ்தம், குதலைக் கனி, கிள்ளைமொழி, மக்கட் செல்வம் ஆகிய நான்கு பகுதிகள் கொண்ட குழந்தைப் பாடல்களின் தொகுப்பு இந்நூல். தமிழ் மணக்கும் எளிய, இனிய, சுவையானபாக்கள், கண்ணைக் கவரும் அழகிய கருத்துப்படங்கள் கொண்ட நூல் இது. பள்ளிப் பிள்ளைகளுக் கேற்ற பயன்மிகு நூல். ஒவ்வொரு பள்ளியிலும் இருக்கவேண்டுவது.

5. விடுதலை: ஆசிரியர். இரா. இளவரசு.—வெளியீடு: இலெட்சுமி புத்தக நிலையம்-50. சிவராயர் தோட்டம் முதல் தெரு, மானம்புச்சாவடி, தஞ்சாவூர்-விலை: 1-50. பக்கங்கள்: 68. சிறப்புக் குறிப்பு: மொழி, இனம், நாடு இவற்றின் விடுதலையுணர்வுக்கு வித்திடும் 21 பாடல்கள் கொண்ட நூல். துள்ளிப்பாயும் தெள்ளுதமிழ் உணர்வு! தொய்வுள்ள இளைஞர் தம் முதுகை நிமிர்த்தி ஏறு நடையிட வைக்கும் வீறு தமிழ்ப் பாக்கள்! செந்தமிழின் ஈரச் சுவைக்கும், எந் தமிழர் வீரச்சுவைக்கும் ஏற்ற ஒரு கலையாக்கம்.

கட்டுரை நூல்கள்.

1. தமிழ் மாநாடு: ஆசிரியர் பர். சாலை - இளந்திரையன். வெளியீடு: தமிழ்ப் புத்தகாலயம், 576, பைகிராப்ட்சு சாலை, சென்னை-5. விலை: 1-50-பக்கங்கள்: 63. சிறப்புக் குறிப்பு: 1974, சனவரி 3-9-இல், யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் மாநாடு பற்றிய நூல் இது. அங்கு நடந்த செய்திகளையும் மாநாட்டில் படிக்கப்பெற்ற சாலையர் இருவரின் கட்டுரைகளையும், அம் மாநாட்டிற்குச் சென்ற ஆசிரியர் அழகிய தமிழில் தந்துள்ளார். படித்துப் பயன் பெறலாம்.

2. நாடும் ஏடும்: ஆசிரியர் பா. வளன் அரசு, க.மு.வெளியீடு: கதிரவன் பதிப்பகம், 12- ஆ, கிருட்டிணன் கோவில் வடக்குத்

தெரு, பாளையங்கோட்டை, நெல்லை-2. விலை: 3-50-பக்கங்கள் 116. சிறப்புக்குறிப்பு, பன்னிரண்டு சிறந்த கட்டுரைகளின் தொகுப்பாகும் இந்நூல். 'அயல் நாடுகளில் அருந்தமிழ்" என்பது அவற்றுள் ஒரு கட்டுரை. மிகப் பயனுடையது; சிறந்தது! மற்றுமுள்ள கட்டுரைகளும் உயர்ந்த பொருள்களைப் பற்றியனவே. சிறந்த நல்ல முயற்சி. தமிழ் மாணவர்கள் தவறாது படித்துப் பயன் பெறுக.

நாடக நூல்கள்.

1. தமிழ் எங்கள் உயிர்: (வரலாற்று நாடகம்). ஆசிரியர் புலவர். ஏ. சந்தனச்சிலுவை, க.இ.-கிடைக்குமிடம்: திரு. விண்ணரசு, 223. மர்பி டவுன், பெங்களூர் 560008. விலை: 3-00-சிறப்புக் குறிப்பு: 'இந்நாடகம் படித்துப் பொழுதுபோக்குவதற்கோ, நடித்து மகிழ் வதற்கோ எழுதப் பெற்றதன்று; தமிழர் தங்கள் நிலையை உணர வேண்டும்; தமிழைக் காத்திட வேண்டும்; தமிழினத்தைத் தலைநிமிர வைத்திட வேண்டும்' என்ற உயர்ந்த நோக்கத்தோடு எழுதப்பட்டதே!- என ஆசிரியர் தம் முன்னுரையில் கூறுகின்றார். நோக்கத்திற்கொப்ப, வரலாற்றுப் பின்னணியுடன் எழுதப் பெற்ற நாடக நூல் இது. 'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார், இங்குள்ள தமிழர்கள் ஒன்றுதல் கண்டே'—என்ற பாவேந்தரின் கனவு நனவாக வேண்டும் என்று ஆசிரியர் இந் நாடகத்தின் வழி எ தி ர் எதிர்பார்க்கின்றார்; நாமும் எதிர்பார்ப்போம்.

2. திருஞான சம்பந்தர் : (வரலாற்று - ஆய்வு - நாடகம்) ஆசிரியர் திருவாரூர் கே. தங்கராசு – வெளியீடு: புகழ்நிலையம் –36, மூன்றாவது தலைச் சாலை, இராசா அண்ணாமலைபுரம். சென்னை-28. விலை: 4.00. பக்கம்:223. சிறப்புக் குறிப்பு: வரலாற்று அடிப்படையில் திருஞான சம்பந்தர் கதை இப்படித்தான் இருக்க வேண்டும் என்னும் முறையில் எழுதப் பெற்ற சிறந்த நாடக நூல் இது. நூலாசிரியர் பல திரைப்படங்களுக்கும் நாடகங்களுக்கும் உரையாடல் எழுதியவர். ஆதலால் அவரின் முத்திரை பல இடங்களிலும் சிறந்தொளிர் கின்றது. படிக்கவும் நடிக்கவும் சுவையான பயனுள்ள நாடகம் இது.

3. நெஞ்சின் கனல் : ஆசிரியர் புலவர் இரா: வடிவேலன்: வெளியீடு: தேவி நிலையம், இராயப்பேட்டை, சென்னை-14.-விலை : 3-50 பக்கங்கள்: 128. சிறப்புக் குறிப்பு: அகநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு, இலக்கியச் சுவை பொதுள எழுதப் பெற்ற நாடகம் இது. இடையிடையே கழகப் பாடல்களை உறுப்பினர்களின் உரையாடல்களில் ஊடாட விட்டிருப்பது சுவை

யாக இருக்கின்றது. மாணவர்களும் தமிழ் ஈடுபாடு உள்ளவர்களும் இதனைப் பெரிதும் விரும்புவர்.

அறிவியல் நூல்கள்

1. பொறியியல் குறியீடுகள். ஆசிரியர் அய்யூர்-இ. அப்பாசு மந்திரி, எல்.சி.இ. வெளியீடு: தமிழ்நாடு பொறியியல் சங்கம், சேப்பாக்கம், சென்னை-5. விலை: 3-00, பக்கங்கள்: 163: சிறப்புக் குறிப்பு: அறிவியலைத் தமிழிலேயே எழுதிக் காட்ட வேண்டும்என்னும் ஆர்வம் மிகுந்து வருகின்றது. அதற்கு அடிப்படையாக எழுந்துள்ள பல்வகை நூல்களில், குறியீடுகள் தொடர்பாக வெளிவந்துள்ளநூல் இது. ஆங்கிலக் குறியீட்டுச் சொற்கள் பல நல்ல தமிழில் பெயர்த்துத் தரப்பெற்றுள்ளன, இந்நூலில். நல்ல முயற்சி; சிறந்த ஊக்கம். ஆனால் பல சொற்களுக்குரிய பெயர்ப்புகள் நீளமாகவும் சுற்றி வளைத்துச் சொல்லப்படுவனவாகவும் உள்ளன. மொழியியல் அடிப்படையில் அவை உருவாக்கப் பெற்றிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்; ஆயினும் இச்சிரிய முயற்சியை அனைவரும் பாராட்டுதல் வேண்டும்.

2. அறிவியல் தமிழாக்க முறைகள்: ஆசிரியர் இரா.- கணேசன். பொறி. மு; அறி.மு.-கிடைக்குமிடம்: அறிவுத் தமிழ்ப்பணி மன்றம்- 5 இரண்டாம் பிறைப்பூங்காச் சாலை, காந்தி நகர், அடையாறு, சென்னை-20-விலை: உருபா ஒன்று. பக்கங்கள்: 46: சிறப்புக் குறிப்பு. அறிவியலின் எல்லாத் துறைகளையும் தூய தமிழிலேயே கற்க முடியும் கற்பிக்க முடியும் எனும் அசையாத நம்பிக்கை கொண்ட இந்நூலாசிரியர், அதன் ஆக்க முறைகளைத் தெளிவுபட இந்நூலில் விளக்கியுள்ளார். இதில், அறிவியல் தமிழ் வளர்ச்சி, தமிழில் மின்னியல்-எனும் இரு கட்டுரைகள் அடங்கியுள்ளன. மிக அருமையான கட்டுரைகள்! சிறந்த முயற்சி! மேலும் இதுபோலும் பல ஆக்க நூல்கள் வெளிவர, ஆசிரியர் முயல்வாராக!

3. பொறியாண்மை நுட்ப விளக்கம்: ஆசிரியர் அய்யூர் இ. அப்பாசு மந்திரி, எல்.சி.இ.-வெளியீடு: தமிழ்நாடு பொறியியல் சங்கம், சேப்பாக்கம் சென்னை-5.-விலை: 2-00. பக்கங்கள்: 86- சிறப்புக் குறிப்பு: பொறியியல் துறையில் இந்நூல் மற்றொரு முயற்சி. தாம் மொழி பெயர்த்த கலைச் சொற்களைப் பயன்படுத்தி பொறியியல் கூறுபாடுகள் பலவற்றை விளக்கிக் காட்டுகின்றார். கணக்கு முறைகளையும் செய்து காட்டுகின்றார். விளங்காத எத்தனையோ கணிப்பு முறைகள் தமிழில் விளக்கம் பெறுவதால் இனிதே விளங்குகின்றன. நிலையான சில கணிப்பு வாய்பாடுகளை நூற்பாக்களாகவே செய்து தம் தூய தமிழ்ப்பற்றை நிலைநாட்டுகின்றார். பல சொற்கள் பெயர்க்கப் பெறாமல் விடுபட்டுள்ளன எனினும் இத்தகைய முயற்சிகளைப் பெரிதும் வரவேற்று ஊக்குவித்தல் வேண்டும். 0

இனம் போன்று இனம் அல்லார்.

—தமிழவேள்.

ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டு ஆங்கில நாட்டில் வாழ்பவர்கள் அனைவரும் ஆங்கிலேயர்கள்; செருமனியைத் தாய் மொழியாகக் கொண்டு செருமனி நாட்டில் வாழ்பவர்கள் அனைவரும் செருமனியர்கள்; பிரெஞ்சு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு பிரெஞ்சு நாட்டில் வாழ்பவர்கள் அனைவரும் பிரெஞ்சியர்கள்—என்று சொல்வதுபோல் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டு தமிழ்நாட்டில் வாழ்பவர்கள் அனைவரும் தமிழர்கள் என்று சொல்வது சரியா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஆங்கில மொழிக்கு ஆதரவு தருவதில் ஆங்கில நாட்டிலுள்ள ஆங்கிலம் பேசும் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். செருமன் மொழியை விரும்பிப் போற்றுவதில் செருமனி நாட்டிலுள்ள செருமனி பேசும் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். பிரெஞ்சு மொழியை மதித்துப் பாராட்டுவதில் பிரெஞ்சு நாட்டிலுள்ள பிரெஞ்சு மொழி பேசுவோர் அனைவரும் ஒரே தன்மையானவர்களாகவே இருக்கி-றார்கள். ஆனால் தமிழ் மொழியைப் போற்றி ஆதரிப்பதில் பேணி வளர்ப்பதில் தமிழ்மொழி பேசும் அனைவரும் ஒரே தன்மையானவர்களாக இருக்கிறார்களா என்றால், இல்லை.

ஆங்கில நாட்டில் இறை வழிபாட்டு மொழி ஆங்கிலமாகத்தான் இருக்கிறது. செருமனி நாட்டில் இறைவழிபாட்டு மொழி செருமனியாகத்தான் இருக்கிறது. பிரெஞ்சு நாட்டில் இறைவழிபாடு என்றால் பிரெஞ்சு மொழியில்தான் நடைபெறுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் இறைவழிபாடு தமிழ்மொழியில் நடைபெறுகிறதா என்றால், இல்லை. வடமொழியில்தான் நடைபெறுகிறது. தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திருவருட்பா போன்ற சிறந்த இறைவழிபாட்டுத் தமிழ் நூல்கள் தோன்றியுள்ள நாட்டில்தான் இன்றுவரை இந்த நிலை இருந்து வருகிறது.

ஆங்கிலம் தெரிந்த ஆங்கிலேயர் எவரும் ஆங்கில நாட்டில் சமயத் தலைவராக—சமய வழிபாடு செய்யும் முதல்வராக வர முடியும்.

செருமனி நாட்டில் செருமனி தெரிந்த செருமானியர் எவரும் செருமனி நாட்டுச் சமய வழிபாட்டு முதல்வராக வர முடியும். பிரெஞ்சு நாட்டிலும் பிரெஞ்சு மொழி தெரிந்த பிரெஞ்சியர் எவரும் அந்நாட்டில் சமய வழிபாடு செய்யும் முதல்வராக வர இயலும். ஆனால் தமிழ் நாட்டிலோ தமிழ் தெரிந்த தமிழர் எவராக இருப்பினும் அவர் தமிழ்நாட்டுக் கோயில்களில் வழிபாடு செய்யும் முதல்வராக வர முடியுமா என்றால், முடியாது. ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் மட்டுமேதாம் கோயிலில் உள்ள கருவறையில் நின்று வழிபாடு செய்யத் தகுந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். அந்தச் சிறுபான்மை வகுப்பினரைத் தவிர்த்து ஏனைய பெரும்பான்மைத் தமிழர்கள் எவருமே,—அவர் எவ்வளவு கற்றவராயினும் சரி, எத்தனை மொழி அறிந்தவராயினும் சரி, எந்த அளவு இறைப்பற்று உடையவராயினும் சரி, கோயில் வழிபாடு செய்யத் தகுந்தவராகக் கருதப்படுவதில்லை. தமிழ்நாட்டில் தமிழ்மொழி பேசும் தமிழர் ஒருவர் சமய வழிபாட்டுமுதல்வராக வர விரும்பினால், அவர் அநதச் சிறு பான்மை வகுப்பில் பிறந்தவராக இருந்தால்தான் முடியும். இல்லை யேல் முடியாது. ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்று சொன்ன திருவள்ளுவரும், ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்று சொன்ன திருமூலரும் பிறந்த நாட்டில்தான் இன்றுவரை இந்த நிலை இருந்து வருகிறது.

மொழியால் மட்டுமே தமிழர்களாக இருந்து கொண்டு இனத்தால் வேறானவர்களாகத் தங்களைக் கருதிக் கொண்டிருக்கும் சிலர் இந்தத் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் தமிழ்நாட்டு மக்கள் தொகையில் நூற்றுக்கு மூன்று விழுக்காடே இருப்பவர்கள்தாம் என்றாலும் எல்லாத் துறைகளிலும் வல்லாண்மை செலுத்துபவர் களாக இருக்கிறார்கள். பேசும் மொழி தமிழ்தான் என்றாலும் தாய் மொழியின்பால் பற்றுக் கொள்ளாமல் வட மொழியின்பால் பற்றுக் கொண்டு இருப்பவர்கள் அவர்கள். உலகத்து உயர் தனிச் செம்மொழி களில் என்றும் நின்று நிலைத்து வாழும் பெருமைக்குரிய ஒரே மொழி தமிழ்தான் என்றாலும், தமிழைவிடச் சிறந்தது வடமொழி என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் அவர்கள். ஒரே நாட்டில் ஒரே மண்ணில் ஒரே வகையாகப் பிறந்து ஒரே வகையாக வளர்ந்தாலும் ஏனைய தமிழர்களினும் தாங்கள் பிறப்பால் உயர்ந்தவர்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள் அவர்கள். மிகப் பெரும்பான்மை

யான தமிழர்கள் தமிழை எப்படிப் பேசுகிறார்களோ அப்படிப் பேசாமல், வேறு வகையாக-வேறுபாடு நன்கு தெரிகின்ற முறையில் -தமிழைப் பேசி வருபவர்கள் அவர்கள்.

அவர்கள் தமிழில் புலமை பெற்றவர்களாகத் திகழலாம்; தமிழில் பிழைப்பவர்களாக இருக்கலாம்; தமிழால் பெருஞ்சிறப்புகளைப் பெறுப வர்களாக இருக்கலாம். என்றாலும் அவர்கள் தமிழ்மொழியை மனமாரப் போற்ற மாட்டார்கள். தமிழின் பெருமையை உளமார ஒப்புக்கொள்ள மாட்டார்கள். வடமொழியில் ஓர் எழுத்தும் அறியாத வர்களாக இருப்பினும் அம்மொழியையே பாராட்டிச் சீராட்டி போற்றிப் புகழ்வார்கள்.

தாங்களும் தமிழ்ப்பற்று உடையவர்கள்போல் அவர்கள் பேச லாம். தமிழில் ஆராய்ச்சி நூல்களைக்கூட எழுதலாம். தமிழின் அருமை பெருமைகளைக்கூட எடுத்துரைக்கலாம். என்றாலும் அவ களுடைய பேச்சையும் எழுத்தையும் ஆழ்ந்து நோக்கினால், அவர்கள் தமிழினும் வடமொழியையே போற்றி மதிப்பதைக் காணலாம்; தனித்தமிழ் முதல் நூல்களையெல்லாம் வடமொழியின் வழி நூல்கள் என்று துணிந்துரைப்பதைப் பார்க்கலாம்; தமிழ்நூல் ஆசிரியர் தம் காலத்தையெல்லாம் வேண்டுமென்றே மிகவும் பிற்பட்ட காலமாகக் கூறுவதைக் காணலாம்; தமிழுக்கு அடிப்படையே வடமொழி-தான் என்பதுபோல் முழுப் பொய்யுரைகளைப் புகுத்துவதைப் பார்க்கலாம்.

தொல்காப்பிய சொல்லதிகாரத்துக்கு விளக்கம் போன்று ஒருவர் ஒரு நூல் எழுதியிருக்கிறார். அந்த நூலில் அவர் தெரிவித்திருக்கும் சில கருத்துகளைப் படிக்கும் பொழுது அவர்தம் மொழிப்பற்றை யாரும் பாராட்டவே செய்வர். “தமிழ் நாட்டில் இன்றுவரை தீராத ஒரு குறை, பதவியும் சாய்காலும் செல்வமும் உள்ளவர்களுக்கு மொழிப்பற்று அழுத்தமாக இல்லாமை. இல்லாவிட்டால் ஆயிர மாயிரம் ஆண்டுகளாக நமது முன்னோர்கள் பயன்படுத்தி, இலக்கணங்களும் வகுத்து வைத்து வழங்கும் அழகிய தமிழ் எழுத்தைக் கைவிட்டு நாகரியிலும் உரோமன் வரி வடிவிலும் தமிழை எழுதலாம் எனப் பேசி வருவார்களா? நம்மிடையே இப்போது வழங்குகிற தமிழ் எழுத்துகளை மாற்றினால் பிறகு நமக்கென்று தனி யாக மொழி ஏது? இந்த எழுத்தைச் சொந்த எழுத்தாக வைத்துக் கொண்டு பன்னெடுங் காலமாக நாம் ஏற்படுத்தி ஆண்டு வரும்

இலக்கண இலக்கியச் செல்வங்கள் என்ன ஆகும்?'' என்று அவர் கேட்கிறார். கேட்டுவிட்டு மேலும் சொல்கிறார். "தமிழ்த்தாயின் உடலையே சிதைப்பதுபோலத் தமிழுக்கென்று அமைந்த எழுத்துகளை மாற்ற முயலும் செயலை எவர் செய்ய முன்வந்தாலும் பொறுக்க முடியாது. தமிழின் தனிச் சிறப்பை இழக்கச் சொல்லத் தூண்டுவது; நீ 'தற்கொலை செய்து கொள்' என்று ஒருவரை இன்னொருவர் தூண்டுவதற்கு ஒப்பாகும்'' என்கிறார்.

இவ்வளவு அழுத்தமாக அவர் கொண்டிருக்கும் மொழிப்பற்று உண்மையானதன்று என்பது, அதே நூலில் வேறோர் இடத்தில் அவர் எழுதியுள்ள சில வரிகளைப் பார்க்கும் போது தெரிந்து விடுகிறது. வடமொழி நூலான 'ஐந்திரவியாகரணம்' என்பதைப் பின்பற்றி அகத்தியர் தமிழில் இலக்கணம் எழுதினார். அந்த அகத்தியரின் இலக்கணத்தைத் தழுவியே தொல்காப்பியர் தொல் காப்பியத்தை எழுதினார்—என்னும் கருத்துப்பட அவர் எழுதுகிறார். ''அவருள்ளும் (வடநூலார்) எட்டு வேற்றுமை கொள்வர் ஐந்திர வியாகரணமுடையார். அவர் கொள்கையைப்பற்றி நூல் இயற்றிய மிகத் தெளி கேள்வியும், மேதகு புலமையும், மகத்துவ மிகுதியும் உடைய ஆசிரியர் அகத்தியனார் தாமும் எட்டு வேற்றுமைகளை உடன்பட்டு விளிவேற்றுமையைக் கூறினார். அந்த அகத்தியத்தைத் தமக்கு முதன் நூலாகக் கொண்ட. ஒல்காப்பெரும்புகழ் தொல்காப்பிய னாரும் எட்டு வேற்றுமை நேர்ந்து விளிமரபு எனப் பெயர் நிறுவிச் சிறப்பில்லா விளிவேற்றுமை இலக்கணத்தைத் தனியே உணர்த்தி னார்''.

தொல்காப்பியரைக் குறிக்கின்ற பொழுது 'ஒல்காப்பெரும்புகழ் தொல்காப்பியனார்' என்று மட்டும் சொல்பவர், அகத்தியரைக் குறிப்பிடும் பொழுது, 'மிகத் தெளி கேள்வியும் மேதகு புலமையும், மகத்துவ மிகுதியும் உடைய ஆசிரியர் அகத்தியனார்' என்று சொல்கிறார். அகத்தியர் என்பவர் யார்? வடநாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்து பொதிகை மலையில் தங்கியிருந்து தமிழில் இலக்கணம் எழுதியவர் என்று சொல்லப்படுபவர். அந்த அகத்தி யரின் மாணாக்கராக இருந்தவர் தொல்காப்பியர் என்று சொல்லும் ஒரு கதையை வைத்துக் கொண்டு, அகத்தியர் இயற்றியதாகக் கூறும் அகத்தியத்தைத் தமக்கு முதன் நூலாகக் கொண்டு தொல் காப்பியர் தொல்காப்பியத்தை இயற்றினார் என்று சொல்கிறார். அந்தக் கதையின்படி அகத்தியர் இனத்தாலும் தமிழர் அல்லாதவர்; மொழி யாலும் தமிழர் அல்லாதவர். —(தொடரும்).

முன்னுரைத் தொடர்ச்சி: தொடர்: 4.

என் உள்ளத்தில் என்றுமில்லாத ஓர் உணர்ச்சி! கற்பனைச் சிறகால் நெஞ்சம் சிறகார்ந்தது! என்னை வழியனுப்ப வந்திருந்த கூட்டத்தினரின் முகங்கள் சிறிது சிறிதாக மறைந்து, அவ்விடத்தை எந்தத் தோற்றமும் புலப்படாத. நீல நிறத்தால் கழுவி மெழுகிய வான்வெளிக் காட்சி அளாவி நின்றது. திட்டுத் திட்டான புகைக் கூட்டங்கள் நான் அமர்ந்திருந்த பலகணிக் கண்ணடிக் கதவோர மாக நீந்திச் சென்றன. கீழே நோக்கினேன். சிறிது நேரம் கடல் தண்ணீர் ஒரே நீலப் படுகையாகத் தென்பட்டது. பின் அந்தக் காட்சியும் மறைந்தது. தூநிற விசும்பினூடே வானூர்தி மிதப்பது போன்றே இருந்தது. அதன் ஓட்டமும் ஒலிஓங்காரமும் சிறிதும் உணர முடியவில்லை. ஒரு சில நிமையங்களுக்கு ஒரு முறை சிறுசிறு அசைவுகள் மட்டும் உணர முடிந்தன. அக்கால் வான் வெளியில் என்ன மாற்றம் ஏற்படுகின்றது என்பதைக் கண்ணடி வழிப் பார்ப்பேன். வானூர்தியின் பக்க இறக்கை சிறிது மேலோ கீழோ திருப்பப் பட்டிருக்கும். வேறொன்றையும் உணர முடியவில்லை.

கசடற்று விளங்கும் அமைதியான வெளிப்புறக் காட்சியினின்று என் கண்களை மீட்டு, வானூர்தியின் உட்புற அமைப்புகளில்

செலுத்தினேன் மெல்லிய ஒளி நிறைவும், தூய்மையான கனமற்ற மாழையாலான வளைந்த சுவர் அமைப்புகளும் அவற்றின் மெல்லிய வண்ணமும், மூக்கை அளாவும் மென்மையான குளிர்ந்த 'ஒடிகொ லோன்' மணமும் என் காட்சியிலும் கருத்திலும் கரைந்து எனக்குப் புத்துயிர் ஊட்டின. நான் அமர்ந்திருந்த உட்கட்டை அளாவி நோக்கினேன். கையில் வானூர்தியில் கொடுக்கப்பட்ட என் பெயர் பொறித்த அட்டை இருந்தது. அதில் என் இருக்கை எண் 9-A, என்று குறிக்கப் பெற்றிருந்தது. இவ்வூர்தி மிகப் பெரியது. உட் கூட்டின் இடையில் இரண்டரை அடி போகவர இடம் விட்டு, இரண்டு பலகணி ஓரங்களிலும் மூன்று, மூன்று பேர் அமர்வது போல் இருக்கைகளை அமைத்திருக்கின்றனர். மொத்தம் நூற்றிருபத்தாறு இருக்கைகள். வலவர்கள் (PILOTS) அமர்கின்ற பகுதி முன்பக்கம் மிகத் தள்ளியிருந்தது. இடையில் அழகிய ஒரு தொங்கு திரை.

வானூர்தி கிளம்பிய சில நொடிக்கெல்லாம், உள்முகப் பணியாள் ஒருவர் உட்கூடத்தின் முன்புறம் வந்து நின்றார். அக்கால் ஒலி பெருக்கியில் வானூர்தித் தலைவர் வழிப் போக்கர்களுக்கு ஆங்கிலத்தில் இனிய வரவும் வணக்கமும் கூறிவிட்டு, வந்திருக்கின்ற பெரியோர்களைத் தாம் மிகவும் அக்கறையுடனும், கவனத்துடனும் அழைத்துச் செல்வதாகவும், அவர்களுக்கெல்லாம் எந்த வகை இடர்ப் பாடும் நேராவண்ணம் அவர்களைக் கொண்டுபோய் ஊர் சேர்ப்ப தாகவும் உறுதிகூறி, எவரும் தம் தலைமையில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டு, ஒருகால், எதிர்பாராத வகையில் பொறிக் கோளாறுகளால் சில நிகழ்ச்சிகள் நேருமானால், வழிச்செலவாளிகள் எப்படி எப்படித் தங்களைத் தாங்களே காத்துக் கொள்ள வேண்டுமென்று, விளக்கி கொண்டு போனார். அவர் கூறுவதற்கேற்ப நாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை, எங்கள் முன்வந்து நின்ற பணியாள், மூச்சுக் கருவிகளைக் கொண்டும், இறங்கு குடையினை எவ்வாறு கட்டிக் கொள்வதென்று கட்டிக் காட்டியும், செய்கை வழி விளக்கிக் கொண்டிருந்தார்.

அவ் விளக்கங்கள் முடிந்து சில நொடிகளுக்குள் பணிப்பெண் ஒருத்தி சில வண்ண வெளியீடுகளை ஒவ்வொருவருக்கும் தந்து கொண்டு வந்தாள். எனக்கும் ஒரு கற்றை வந்தன. நான் அமர்ந்த மூன்று இருக்கை வரிசையில், நடு இருக்கையில் எவரும் இல்லை.

அதற்கடுத்த இருக்கையில் நன்றாக உடை உடுத்த உயரமான ஒருவர் அமர்ந்திருந்தார். அவர் என்னை அடிக்கடி உற்றுப் பார்த்துக் கொண்டே வந்தார். நான் வேட்டியும் சட்டையும் உடுத்தி ருந்ததோடு மீசையுடனும் குறுந்தாடியுடனும் இருந்ததால் அவருக்கு நான் வியப்பாகப் பட்டிருக்க வேண்டும். அவரை அரைக் கண்ணால் பார்த்துக் கொண்டே, என்னிடம் கொடுத்த வெளியீடுகளைப் படித்துக் கொண்டிருந்தேன்.

கொடுக்கப்பட்டிருந்த வெளியீடுகளில் வானூர்தி வழிகளைக் காட்டிய படமும், இருக்கைகளுக்குக் கீழே அமைந்துள்ள வானொலி அமைப்புகளை எப்படிப் பயன்படுத்துவது, என்னென்ன பாடல்கள் எந்தெந்தத் தொடர்பெண்களில் ஒலிபரப்பப்படும் என்னும் விளக்க வெளியீடும், வானூர்தியில் என்னென்ன பொருள்கள் விலைக்குக் கிடைக்கும் என்பதுபற்றிய விளம்பர அட்டை ஒன்றும், அன்றைக்கு இடைவேளையுணவு என்னென்ன தரப்படும் என்பதுபற்றிய விளக்கச் சுவடி ஒன்றும், அழகிய படங்களை ஒரு புறத்தில் அச்சிட்ட இரண்டு அஞ்சலட்டைகளும் இருந்தன. சில உலக நாடுகளுக்கிடையில் வான் வழியாக உள்ள இடைத் தொலைவும் எத்தனை மணிகளில் அவற்றிற்குப் போய்ச் சேர முடியும் என்னும் விளக்கமும் அவ் வெளியீட்டட்டைகளில் இருந்தன. உடனே சென்னைக்கும் சிங்கைக்-கும் எத்தனைக் கற்கள் என்று பார்த்தேன். 2921 ஆயிர அளவடிகள் (கி.மீ.) என்று போட்டிருந்தது. ஏறத்தாழ 1814 கற்கள். வழிப் போக்கு நேரம் 3 மணி 50 நிமையங்கள், என்ற குறிக்கப் பெற்-றிருந்தது. ஆக, அந்த வானூர்தி மணிக்கு 450-இலிருந்து 500 கற்கள் விரைவில் பறந்து கொண்டிருந்தது. அந்த விரைவைச் சிறிதும் உணர முடியவில்லையே!

அன்றைக்கு என்ன உணவு தரப்பட விருக்கின்றது எனும் பட்டியலைப் பார்த்தேன். பட்டியல்கள் ஆங்கிலத்திலும், சீனத்திலும், மலாய் மொழியிலும், தமிழிலும் இருந்தன. தமிழில் இருப்பவற்றை ஆவலாகப் பார்த்தன என் கண்கள்.

"மிதமான சாப்பாடு: கோழிப் பொறியல், காரமான காய் கறிக் கலவை, டப் ஆலூ, பிரியாணிச் சோறு, பாலேடு, ரொட்டியும் வெண்ணெயும், காபி-தேனீர்".

—என்றிருந்தன. பட்டியல் ஓரளவு தூய தமிழில் இருந்தது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. சோறு என்பதைச் சாதம்

என்றும், பாலேடு என்பதை 'சீஸ்' என்றும், வெண்ணெயைப் பட்டர் என்றும், தேநீரை 'டீ' என்றும், கோழிப் பொறியலைச் சிக்கன் ரோஸ்டு என்றும் எழுதியிருந்தால் யார் தடுக்க முடியும்? அதுமட்டுமன்று. அதே பக்கத்தில் சிங்கையிலிருந்து சென்னை வருபவர்க்குத் தரப் பெறும் பகல் உணவுப் பட்டியலும் தரப் பட்டிருந்தது. அதையும் படித்துப் பார்த்தேன்.

"மதிய உணவு: ஊறுகாய் வகைகள், காளானில் போட்டுச் சமைத்த கோழி, வெண்ணெயிட்ட பூக்கோசு, தணலில் சமைத்த காளான், உருளைக் கிழங்குப் பொறியல், இறால் மீன் கறி, காரமான காய்கறிக் கலவை"— என்று சில வகைகள் கூடி யிருந்தன.

எனக்கு அவற்றிலிருந்த சுவையை விடத் அந்தத் தமிழில்தான் சுவை மிகுந்திருப்பதுபோல் தெரிந்தது." அடாடா, இந்தச் சிங்கை வானூர்திக் குழுமம் ஒரு பார்ப்பனப் பதடி கையிலோ, ஒரு தமிழடிமையின் கையிலோ கிடைத்திருந்தால், ஊறுகாய் வகை களைப் 'பிக்கிள்ஸ் வெரைட்டீஸ் என்றும், வெண்ணெயிட்ட பூக்கோசை, 'பட்டர்டு காலி புளவர்' என்றும், உருளைக் கிழங்குப் பொறியலை, 'பொட்டட்டோ ப்ரை கறி' என்றும் பலவாறுக ஆங்கில உயிரும் தமிழ் உடம்புமாகவன்றே அச்சிடப் பெற்றிருக்கும். சென்னையில் அப்படித்தான் எழுதப்பெற்று 'அவாள்' உணவு விடுதிகளின் முன் பலகைகள் வைக்கப் பெற்றிருக்கும். இந்த அடிமைத் தமிழர்களும் அந்தப்படி தானே 'காயடிக்கப்' பெற்று, ஆண்மை குன்றி, மானமிழந்து வருகின்றனர். நல்ல வேளை இந்த வானூர்தி வெளிநாட்டார் கைகளில் உள்ளது; அதனுல் தமிழைத் தமிழாகப் போட வேண்டும் என்று எண்ணியுள்ளது, அவர்களின் நல்ல நெஞ்சம்"—என்றெல்லாம் நினைத்து பூரித்துப் போனது என் உள்ளம். 'தமிழே! நீ வாழ்க!' என்று என் உள்ளத்திற்குள்ளேயே உரக்க வாழ்த்திக் கொண்டேன்.

அடுத்து என் கைகளிற் கொடுக்கப்பெற்ற அஞ்சலட்டைகளில் ஒன்றையெடுத்துப் பயன்படுத்திப் பார்க்கலாம் என்று எண்ணியது, என் நெஞ்சம். உடனே வீட்டிற்கு நான் வானூர்தியில் பறந்து கொண்டே எழுதுவதாகவும், இன்னும் சிறிது நேரத்தில் சிங்கையில் காலடி வைத்து விடுவேன் என்றும் ஓர் அட்டையில் எழுதி, அதை வான்புரக்குநி (Air-hostess) ஒருத்தியிடம் கொடுத்தேன். அவள்

புன்சிரிப்புடன் அதை வாங்கிக் கொண்டு சென்றாள். அஞ்சல்தலைச் செலவை வானூர்திக் குழுமமே ஏற்றுக் கொள்கின்றது. எனவே வானூர்தியில் செல்லும் பொழுது நாம் எத்தனை அஞ்சல்கள் வேண்டுமானாலும் எழுதலாம் என்று சொன்னார்கள்.

அதைத் தொடர்ந்து, அருகில் உள்ள புதியவரைத் திரும்பிப் பார்த்தேன். அப்பொழுதும் அவர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். நான் பார்த்தவுடன் ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு, 'எங்குப் போகிறீர்கள்?' என்று ஆங்கிலத்தில் கேட்டார். 'சிங்கப்பூர்' என்றேன். 'இதுதான் முதல் முறையா?' என்றார். 'ஆம்' என்றேன். 'எங்குத் தங்கப் போகிறீர்கள்?' என்று மீண்டும் கேட்டார். நான் விளக்கமாக ஆங்கிலத்திலேயே விடையளித்தேன். அவர் ஒரு வடநாட்டார். குசராத்துப் பகுதியினர். அவரைப்பற்றிச் சில வியப்பான செய்திகளைச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் மிகவும் பெரிய பணக்காரராம்; தனித்தவராம். தம்மிடம் ஏராளமாகப் பணம் இருப்பதாகவும், எனவே இந்தியாவில் தொடர்ந்து ஒரு மாதம் கூட இருப்பதில்லை என்றும், எப்பொழுதும் வானூர்தியிலேயே சிங்கப்பூர், மலையா, பினாங்கு, சப்பான், அமெரிக்கா, இலண்டன் என்று சுற்றிக் கொண்டிருப்பவர் என்றும் சொல்லிக் கொண்டே வந்தார். அவர் பேச்சிலும், உடையிலும், நடந்து கொண்ட முறையிலும் அஃது உண்மையாகவே இருக்கும் என்று எனக்குப் பட்டது. இப்படியும் ஒருவரா என்று வியப்பாக விருந்தது. "இப்படி வீணாகப் போகும் பணமெல்லாம் தென்மொழிக் கிருந்தால்..." என்று ஒரு பெருமூச்சு விட்டேன்.

"நீங்கள் என்னதான் செய்து கொண்டிருக்கின்றீர்கள்? சிங்கப்பூரில் எங்குத் தங்குவீர்கள்?"—என்று அவரைக் கேட்டேன். "அதையெல்லாம் கேட்க வேண்டாம். நமக்குள் அந்த அறிமுகம் தேவையில்லை. ஏதோ வானூர்தியில் பார்த்தோம்; பேசினோம் என்று மட்டும் இருக்கட்டும். என்னைப்பற்றிய எல்லாச் செய்திகளையும் நீங்கள் தெரிந்து கொள்வதில் ஒரு பயனும் இல்லை"—என்று கூறி என் முன்னைய நினைப்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார். 'ஆள் மிகவும் அழுத்தமானவர் தாம்' என்று எண்ணிப் பேசாமல் இருந்தேன்.

இந்த நேரத்தில் வான்புரக்குநி ஒருத்தி கண்ணாடிக் குவளைகள் நிரம்பிய ஒரு தட்டை எங்கள் முன் நீட்டினாள். குசராத்தியர் சிரித்துக் கொண்டே 'நீங்கள் மது அருந்துவீர்களா?'

என்று கேட்டார். 'அருந்துவதில்லை; ஆனால் அருந்தியிருக்கிறேன்' என்று சொன்னேன். 'எப்பொழுது' என்றார். 'வெளியூர்ச் செலவுகளால் அடிக்கடி மார்பில் சளி கட்டிக் கொள்ளும். ஒரு முறை அவ்வாறு கடுமையாகத் தொல்லை கொடுத்தது. அக்கால் என் நெருங்கிய மருத்துவ நண்பர் ஒருவர் "கொடிமுந்திரி வடிநீர் (Brandy) கொஞ்சம், கொஞ்சம் அருந்துங்கள்" என்று பரிந்துரைத்தார். அக்கால் தொடர்ந்து ஒரு மூன்று மாதங்கள் அருந்தியதுண்டு. அதனால் நலமும் தெரிந்தது" என்றேன். இதற்குள் அவர் ஒரு குவளை கொடிமுந்திரித் தேறல் (Wine) எடுத்துக் குடித்து விட்டு, அவளிடம் "மாத்தேறல் (Whisky) ஒரு குவளை வேண்டும்' என்றார். அவளும் வேறு ஒரு குவளையை எடுத்துக் கொடுத்தாள். அதன்பின், அவர் என்னைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டி, 'நீங்களும் இந்தக் கொடிமுந்திரி வடிநீர் ஒரு குவளை அருந்தலாமே! இது வெளிநாட்டினது; உயர்ந்தது; மயக்கமோ வெறியோ வராது; உடலுக்கும் நல்லது. மிகுதியாகக் குடிப்பதுதான் கேடு" என்றார். நான், 'இதன் விலை என்ன?" என்றேன். அவர் கடகடவென்று சிரித்து விட்டு, 'அதற்காகத்தான் தயங்கினீர்களா; இதற்கு நீங்கள் இங்கு ஒரு காசும் தர வேண்டுவதில்லை. இவ்வூர்தியில் கொடுக்கப்படும் அனைத்திற்கும் விலையில்லை. எதை வேண்டுமானாலும் கேட்டு வாங்கிச் சாப்பிடலாம்" என்று கூறிவிட்டுக் கொடிமுந்திரிச் சாற்றில் ஒரு குவளையை எடுத்து என் கையில் கொடுத்தார். நான் அதைச் சிறிது சிறிதாக அருந்தினேன்.

அடுத்த சில நிமையங்களில் உணவு வந்தது. ஒவ்வொருவருக்கும் முன்னுள்ள இருக்கையின் முதுகுப் புறத்தில் மடித்து வைக்கப் பெற்றிருக்கும மாழைப் பலகையை எடுத்து விட்டு, உணவுத் தட்டுகளை அதன்மேல் வைத்துக் கொண்டோம். கரண்டியையும், முட்கரண்டியையும் பயன்படுத்தி உண்ண வேண்டியிருந்தது. உணவருந்தும் பொழுதும் மது பரிமாறப்பட்டது. வேண்டாதவர்கள் பழச்சாறு வாங்கிக் கொள்ளலாம். உணவு ஒருவாறு முடிந்தது.

நான் வெற்றிலை போடுவது உண்டாகையால் வெற்றிலைப் பெட்டியைக் கூடவே எடுத்துச் சென்றிருந்தேன். உணவுக்குப் பின் வெற்றிலை போட்டு மென்றுவிட்டு, வாய் கொப்புளிப்பதற்காகக் கழுவறைக்குச் சென்றேன். வாயையும் முகத்தையும் கழுவிக் கொண்டிருக்கும்பொழுது அங்கிருந்த ஒரு சிவப்பு விளக்கு எரிந்தது. அதனடியில் ஓர் அறிவிப்புப் பலகையில், 'வானூர்தி ஓர் இக்கட்டில் உள்ளது. உடனே உங்கள் இருக்கைக்குச் சென்று இடைவாரைக் கட்டிக் கொள்ளவும்' என்று எழுதியிருந்தது. விடுவிடென்று முகத்தைத் துடைத்துக் கொண்டு இருக்கைக்குச் சென்று இடை-வாரைக் கட்டிக் கொண்டு அமர்ந்தேன். என்னமோ ஏதோ என்று ஓர் அச்சம் எல்லாருடைய முகத்திலும் தெரிந்தது. -(தொடரும்)

மேலூர், அரசினர் கலைக்கல்லூரியில் பார்ப்பன முதல்வரின் கொடுமை!

- மாணவர்கள் அல்லல் படுகின்றனர்; உடனடியாக முதல்வரை வெளியேற்றுக!
- அதிகாரிகளும் அமைச்சர்களும் ஆவன செய்வார்களா?

மதுரை, மேலூரில், கலைஞர் கருணாநிதி அரசினர் கல்லூரி முதல்வர் ஓர் ஆரியப் பார்ப்பனர், அவர் தமிழ் மாணவர்களுக்கும், தமிழ்ப்பற்றும் தன்மானமும் மிக்க ஆசிரியர்களுக்கும், தமிழின ஊழியர்களுக்கும் செய்து வரும் கொடுமைகள் மிகப்பலவாம். அவராலேயே அடிக்கடி கல்லூரி மூடல்களும், நிறுத்தங்களும் நடைபெறுகின்றனவாம்! ஆனால் பழியை மாணவர்களின் மேல் போட்டுவிட்டு, தமிழின மாணவர்களின் படிப்பைக் கெடுத்து வருகின்றாராம்! கேட்க ஆளில்லையாம்! அமைச்சர் ஒருவரின் அரவணைப்பும், ஊர்ப் பெரியவர்கள் சிலரின் சாய்காலும், மதுரை மலையாளப் பார்ப்பனக் காவலதிகாரி ஒருவரின் கட்டுக்காவலும், அவரை அந்தக் கல்லூரியினின்று அசைய விடாமல், 'மேன்மேலும் கல்லூரிக் குழப்பங்களை விளைவிக்கப் பெருந்துணையாக உள்ளனவாம்! மாணவர்களும் ஊர் மக்களும் இதே பேச்சாக விருக்கின்றனர்!

''மாணவரின் பேரவைப் பணத்தைக் கையாடல் செய்தாராம்; கல்லூரிக் கணக்கில் கைவைத்தாராம்! பார்ப்பனர்க்குத் தனியே தண்ணீர்ப்பானை வைத்தாராம்! பிற மாணவர்களும் ஆசிரியர்களும் தொட்டால் 'தீட்டு', 'தோஷம்' என்று கடிகின்றாராம்! மாணவர்களின் உதவித் தொகைக்கு முட்டுக் கட்டையாக நிற்கிறாராம்; தட்டிக் கேட்டால் மாணவர்களை வம்புக்கும் வழக்கிற்கும் இழுக்கின்றாராம்; தமக்கு வேண்டாத, மாணவர்கள் சார்புள்ள ஆசிரியர்களுக்கும் பல வகையிலும் தொல்லை கொடுக்கின்றாராம்; அத் தொல்லைகளைப் பொறுக்காமல் சிலர் வேறு கல்லூரிகளுக்கே மாற்றிக் கொண்டு போய் விட்டனராம்!"—இப்படி அடிபடுகின்றன அவ்வூரில், அவரைப் பற்றிய பேச்சுகள்!

மாணவர்கள், 'பழிவாங்கப்படுகின்றோம்' என்று அலறித் துடிக்கின்றனர்; 'படிப்புப் பாழாகிறது' என்று வெம்பிக் குமுறுகின்றனர். இதற்கு விடிவே இல்லையா? அப்படி அந்தப் 'பிராமண நல்லவ' (சுப்ரமண்ய)ருக்குத் துணை போகும் 'இராம' (அழகிய)(!) அமைச்சர் யாரோ?

தேர்வு நடப்பதற்குள் மாற்றம் நிகழ்ந்தால்தான் நல்லது; இல்லெனின் நூற்றுக்கணக்கான தமிழ மாணவர்களின் வாழ்க்கையைக் கெடுத்து விடுவாராம் அந்த முதல்வர்! அப்படி மிரட்டியுள்ளாராம் அவர்!

எப்படி முடியுமோ? அதற்கு ஆட்சியாளர்களே பொறுப்பு!

அறிஞர்க்கு ஒரு பழஞ்சுவடி; கிடைத்தற்கரிய ஓலைக் கற்றைகள்! மறுத்திலேன். ஆனால் அய்யா! அவ்வப்போது தங்கள் தமிழ் ஓ(ட்)டம் அரசியல் காற்றில் சிக்கித் திசை மாறுவது ஏன்? விளங்கவில்லை! தமிழகத்திற்குத் தமிழன் ஆட்சியே தேவை என்கிறீர்கள்! இருக்கும் தூய தமிழன் ஆட்சியைச் சிற்சில இடங்களில் ஆதரிக்கவும் செய்கின்றீர்கள் மகிழ்கின்றேன். திடுமென அதே தனித்தமிழன் ஆட்சியைக் குத்தி விடுகிறீர்களே!—ஏன்? அற்றைநாள் புலவர்களெல்லாரும் தலைதாழாது வாழ்ந்தனரே.... அவ்வழியைத் தாங்களும் பற்றுகிறீர்களோ? இருப்பின், அதனையும் வரவேற்கிறேன். ஆயினும், அப்புலவர் பெருமாண்புடையர் தாம் விரும்பும் ஆட்சிக்குக் கருத்துக் கூறி அரவணைத்துப் பலபடப் பாடியுள்ளனர்; காத்துள்ளனர்! என்னதான் தனித்தமிழ் அல்லது தமிழ்ப்பணி இருப்பினும் அரசியல் இயக்கம் ஒன்றைத் தழுவாது இக்காலச் சூழ்நிலையில் எப்பணியும் சிறக்காது. தங்கள் தொண்டு இத்தனை ஆண்டுகள், நடந்தும் இலைமறை காயாய் உள்ளதே!

—கோவை. மா. திருமாறன், சென்னை-94.

0: 424. இன்றமிழ் வழங்குமித் தென்றமிழ் நாட்டு மாண்புறு மாந்தர், தூய தமிழார்வமும், பற்றும், அறிவும் பெற்றிலங்க வேண்டுமெனும் பெருநோக்குடன், கடந்த பதினைந்தாண்டுகளாகத் தமிழகத்திலேயே இந்தியாவிலேயே, தூய தனித்தமிழில் வெளியாகும், உயரிய தனித்தமிழ்த் திங்களிதழ், 'தென்மொழி' ஒன்றேயாம். 'தனித்தமிழே இனித்தமிழ்' எனுந் தூய தமிழுணர்வு இக்காலத் தமிழ இளைஞர் சிலரிடை, விரைந்து பரவி வருகின்றது. என்றாலும் இளைஞர் பலர் (பட்டந்தாங்கியோருட்பட) பாலியல் உணர்வூட்டும் இதழ்களையே நாள்தோறும் நாடித் தேடி வாங்கிப் படிக்கின்றனர். இவர்கட்கு வேண்டிய உணர்வுச்சுவை யூட்டவல்ல இதழ்களே உயர்ந்த இதழ்கள் போலும்! ஏடாயிரங்கோடி எழுதிக்குவித்தாலும், பாலியல் உணர்வுகளைத் தூண்டக்கூடிய இதழ்களை இழக்க இவர்கள் இசைவாரோ? தூய தமிழ் எழுதாத இதழ்களைப் பொசுக்கத் துணிவரோ? அருமைத் தமிழ் இளைஞர், அனைவரும் ஒன்றுகூடித், தமிழ்நலங் கெடுக்கும் இதழ்களையெல்லாம் புலங்குவித்துப் பொசுக்குநாளே பொன்னாள். அந்நாள் விரைவில் வருவதாக!

—பெரு தமிழ்வேந்தன். உத்தண்டியூர்.

0: 425. ....தென்மொழியைப் பின்பற்றும் ஒரு சில ஏடுகள் தந்நலத்திற்குச் செயல்படக் காணுகின்றேன். பொதுநலத் தொண்டு இவற்றிடம் இல்லை. தென்மொழிக் கொள்கைகள் இல்லை. போலிப் புனைவு போடுகிறார்கள். ஐயா அவர்கள் கவனம் செலுத்த வேண்டுகிறேன்.....

—மு. ச. அழகேசன், சென்னை-17.

0: 426. தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும் விடி விளக்காய்த் திகழும் தாங்கள் பல்லாண்டு, பலநலனும் பெற்றுச் சிறந்து வாழ எல்லாம் வல்ல இறைப் பேரருள் அருள்புரிய வேண்டுகிறேன். சூடு, சொரணையற்றுக் கிடந்த, கிடக்கின்ற தமிழினத்தை மீட்க இப்போது, நாடு இருக்கின்ற நிலையில் தாங்கள் ஒருவர்தாம் உண்மையுள்ளத்தோடு உழைத்து வருகிறீர்கள். தங்களின் அயரா உழைப்பினால் இவ்வளவு காலம் எழுதியும் பேசியும்; தமிழையும், பாவாணரையும்

(அடுத்த பக்கம் பார்க்க)

இப்போதுதானே தமிழ்நாடு தலைதூக்கிப்பார்க்கிறது. பாவாணர் என்றால் தமிழ்நாட்டுக்கு எங்கிருந்தோ வந்த புதுமாந்தர் போலன்றோ பலர் நோக்குகின்றனர். எல்லாவற்றினின்றும் விழிப்படைய விடுதலை மிகவும் இன்றியமையாத அடிப்படைத் தேவையாகும். நாம் செய்ய வேண்டுவதெல்லாம் அதற்கான விதையை ஊன்ற மக்களைத் தட்டி யெழுப்ப வேண்டுவதே. மக்களை அதற்கு அணியமாக்க வேண்டும். இதுவரை வந்த அரசியல் தலைவர்களெல்லாரும் மொழியையும், நாட்டு விடுதலையையும் முன்னே சொல்லித் தங்களை வளர்த்துக் கொண்டார்கள். பின்னர் தங்களுக்கு இடர்ப்பாடு நேருமிடத்து மூலக் கொள்கையை அடகுவைத்துத் தம் வயிற்றையும் சுற்றத்தையும் வளர்த்துக் கொண்டார்கள். இறுதியில் தந்தை பெரியார் அவர்களும் பாதிக்கிணறு தாண்டி மக்களைக் கிணற்றுக் குள்ளேயே விட்டு விட்டார்கள். தம் இறுதிகாலத்தில், எண்ணியதைச் செயல் படுத்த இயலாத நிலையில் மூச்சை விட்டு விட்டார்கள். என்செய்வது? ஆகவே தங்களைப் போன்ற அறிஞர்களெல்லாரும் தூங்கிக் கிடக்கின்ற தமிழினத்தைச் சற்று எழுப்பி நிலைமையினைத் தெளிவாக்கினால்—தான் நம் காலத்தில் இல்லாவிட்டாலும் அடுத்த தலைமுறையினரா வது விடுவிக்கப்படுவார்கள். தந்தை பெரியார் செய்யத் தவறியதை எண்ணித் திட்ட மிட்டுச் செயல் பட்டுத் தமிழகத்தை விடுவிக்க வேண்டுகிறேன்.

—ப. இறையெழிலன், உறந்தைராயன் குடிக்காடு.

0: 427. அன்புடையீர்! வணக்கம். 'தென்மொழி' சுவடி 12 ஓலை 2 ஆசிரிய உரை நீங்கள் எழுதியதுதானா? வியப்பாக இருக் கிறதே! தமிழக எளியவர்களின் அவல ஓலம் இங்கே வந்து எட்டு கிறது, என்று நான் தெரிவித்த போதெல்லாம், 'அருட் செல்வர் ஆட்சிக்கு அரண்' சொல்லிக் கொண்டிருந்தீர்கள். இப்போதாவது நம் தமிழ் ஏழைகளின் அழுகுரல் உங்கள் செவிக்கு எட்டியது பற்றி மன நிறைவு கொள்ளுகிறேன். எடுத்துரையுங்கள்; இடித்து உரை யுங்கள். கேட்டால், ஆட்சிக் கட்டிலின் நலன்களில் அவர்கள் நீந்தட் டும். இல்லையேல், பலர்போன பொதுநெறியிலேயே போகட்டும்.

பர். சாலை இளந்திரையன். புதுத்தில்லி-5

0: 428: நான் பதினைந்து அகவை உடைய தென்மொழி அன்பன். நானும், என் நண்பர்களும் சேர்ந்து எங்கள் ஊரில் "இளந்தமிழர் தனித்தமிழ் இயக்கம்" என்னும் இயக்கத்தைத் தோற்றுவித்து, உயிர் மூச்செனவளர்த்து வருகின்றோம். இளைஞர் களுக்காகத் தமிழ் எழுச்சி, உரிமைக்குரல், சிறுவர் குரல், தமிழ் முரசு, தமிழ்த்தென்றல் ஆகிய கையெழுத்து இதழ்களைச் சிறப்பாக நடத்தி வருகின்றோம். அன்பர்கள் அனைவரும் பாராட்டி வரு- கின்றனர். தங்களை ஆசானாக ஏற்ற எனக்குச் சிலநாட்களாக ஒரு விருப்பம் இருந்து வருகின்றது. பாவாணர் அவர்களுக்குத் தாங்கள் பிள்ளைத் தமிழ் பாடவேண்டும் என்பதே அவ்விருப்பமாகும்.

ந. மு. தமிழ்மணி, புதுவை-9.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தமிழகம்.